வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 25.03.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 110 பக்கங்கள் : 12




# ஆட்சியை கவிழ்ப்போம்!

## மகாநாயக்க தேரர்களை சந்தித்தபின் விமல் உறுதி

கண்டி, மார்ச் 25

“அசிங்கமான அமெரிக்கரை வைத்துக்கொண்டு இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது. எனவே, அரசின் சாதாரண பெரும்பான்மை பலத்தையும் விரைவில் இல்லாமல் செய்வோம்.” - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

11 கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று கண்டிக்கு சென்று வரலாற்று சிறப்புமிக்க தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். 11



## அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட

# உணவு பொருட்களின் விலை 40 வீதம் வரை அதிகரித்தது!

கொழும்பு, மார்ச் 2

**நாட்டில் அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 30 முதல் 40 வீதம்வரை அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இறக்குமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது.**

டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக ஏற்படும் வீழ்ச்சியாலேயே இந்தப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று சங்கத்தின் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஒரு டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 290 - 295 ரூபாய் வரை நேற்று சில வங்கிகள் நிர்ணயம் செய்திருந்தன. இந்நிலையிலேயே சீனி, பருப்பு, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

எனினும், இந்தியக் கடன் மூலம் டொலருக்கான தேவை குறைவடைவதால் வரும் நாட்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழரை அடையாள ரீதியாக ஒழிப்பதே அரசின் நோக்கம்!

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் தமிழர்களை அடையாள ரீதியாக இல்லாமல் ஒழிப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. இந்த அடிப்படையிலேயே மூன்று தமிழ் பேசும் நீதிபதிகளின் தேவை இருக்கின்ற நிலையில் அண்மை யில், மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 13 பேரும் சிங்களவர்களாகவே உள்ளனர்”, என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான 11

## தேடப்பட்ட வெடிமருந்து கடத்தல் நபர் கைதானார்!

கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சியில் தேடப்பட்டு வந்த வெடிமருந்து கடத்தல்காரான ரமேஷ் என்பவரை இராணுவ புலனாய்வு பிரிவினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்தனர் என்று பயங்கரவாத தடைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பரந்தனை சேர்ந்த சிவலிங்கம் யுவராஜ் (வயது 25) என்பவர் கடந்த 05.12.2021 அன்று கிரைண்டர் மூலம் வெடிமருந்துகளை வெட்டியபோது மோட்டார்குண்டு வெடித்ததில் உயிரிழந்தார். 11

## நிதி அமைச்சர் ஊமையா? எதிர்க்கட்சியினர் கேள்வி

கொழும்பு, மார்ச் 25

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்திற்கு வந்திருந்த நிலையில், அவரிடம் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பிலும், இந்திய மற்றும் சர்வதேச நாணய நிதியத்து டனும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு எதிர்க்கட்சியினர் வலியுறுத் 11

## சர்வகட்சி மாநாட்டின் பின்னணியில் சூழ்ச்சி

### சபையில் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 25



சர்வகட்சி மாநாட்டின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளதென்பதை விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஏற்றுக்கொண்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ரணிலுடன் இணைவார்கள் என விவசாயத்துறை அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் 11

## சஜித்தின் சகாக்கள் ரணிலுடன் சங்கமம்

### மஹிந்தானந்த சபையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

“சஜித் அணி உறுப்பினர்கள் எட்டு பேர் இன்னும் இரு வாரங்களில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவார்கள்” - என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று சபையில் தகவல் வெளியிட்டார்.

“ நிதி அமைச்சர் பதவியை பெறுவதற்காக ஹர்ஷ டி சில்வா ஓட்டோவில் பயணிக்கின்றார். வீதிகளில் நடமாடுகின்றார். எதிரணி ஆட்சியைப் பிடிப்ப தென்பது பகல் 11

## 10 இலட்சம் சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிகை!

### லிட்ரோ எரிவாயு நிறுவனம்

கொழும்பு, மார்ச் 25

நாடு முழுவதும் அடுத்த 10 நாட்களில் 10 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

3,600 தொன் எரிவாயு கப்பல் திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தது. அதிலிருந்த எரிவாயு தரையிறக்கப்பட்டு கெரவலப்பிட்டி முனையத்தில் போதுமானளவு கையிருப்பில் வைக்கப் பட்டுள்ளது 15

## உயரும் ‘வரிசை மரணம்’; நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 25

எரிவாயு பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

கொழும்பு - தெகிவளையில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை முதல் தெகிவளை காலி வீதியில் வைத்தியசாலைக்கு அண்மையாக உள்ள எரிவாயு விற்பனை நிலையத்தில் காத்திருந்தவரே இவ்வாறு உயிரிழந்தார். இந்த மரணத்துடன், வரிசையில் காத்திருந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது. (ஐ)

## ரயில் முற்பதிவு கட்டண உயர்வு உடன் இரத்து!

கொழும்பு, மார்ச் 25

ரயில் ஆசன முன்பதிவுக் கட்டண அதிகரிப்பு உடன் அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் சில நகரங்களுக்கிடை 11

## தமிழ் தேசிய கூட்டமைப்பை இன்று ஜனாதிபதி சந்திப்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்த சந்திப்பில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் அரசுக் கட்சி, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுமே பங்கேற்பர். மற்றொரு பங்காளிக் கட்சியான ரெலோ கட்சியில் இந்த சந்திப்பில் பங்கேற்க மாட்டார்கள் என்று முன்னரே அறிவித்திருந்தது.

ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்த சந்திப்பு கடந்த 15ஆம் திகதி இடம்பெறுவதாக இருந்தது. ஆனால், எதிர்க் கட்சி நடத்திய போராட்டம் காரணமாக இன்றைய தினத்துக்கு சந்திப்பு ஒத்தி வை 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கடைசி உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். புலம்பெயர் தேசங்களில் இருந்து இந்த ஊர்க்குருவின் இரண்டு சகோதரர்கள் குடும்பமாக தயாகம் வந்திருந்தனர்.

ஒரு குடும்பத்தவர் பிரான்சில் வாழ்கின்றனர். மற்றவர் குடும்பம் ஜெர்மனியில் வாழ்கின்றது.

இரண்டு குடும்பங்களிலுமிருந்த குழந்தைகள், அவர்களும் அண்ணன் - தம்பி பிள்ளைகள்தான். அதாவது, அவர்களும் ஒருவருக்கொருவர் சகோதரர்கள்தான். அவர்கள் தங்களுக்கிடையே பேசி மகிழ்வதற்கு, தமிழ் மொழியில் பேச திக்குமுக்காடியது வேறு கதை.

சிங்களவர்கள் தமிழ்பேசுகின்றபோது மகிழ்ந்து பார்த்தது போல, தமது பிள்ளைகள் தமிழ் பேசுவதை மகிழ்ச்சியுடன் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தனர் பெற்றோர்.

அதுவல்ல இப்போது சொல்ல வருவது, உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடக்கின்றபோது அவர்கள் வேறு எந்த விடயத்தையும் கவனத்தில் கொள்ளவில்லை. பிரான்ஸோ, ஜெர்மனியோ விளையாடுகின்றபோது மாத்திரமல்ல, மற்றைய நாடுகள் விளையாடுகின்றபோதும் யார் வென்றால் தமது நாடு அவர்களை இலகுவாக வெல்ல முடியும் என்பதற்காக மற்றைய நாடுகள் விளையாடுகின்ற போட்டிகளையும் ஆர்வத்துடன் பார்த்து ரசித்தனர்.

பிரான்சிலிருந்து வந்த சகோதரர் பிரெஞ்சு நாட்டு கோஷ்டி விளையாடுகின்றபோது, தமது நாடு வெல்ல வேண்டும் என்று தன் இஷ்ட தெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொள்வார். ஆதேபோல, ஜெர்மனி விளையாடுகின்றபோது ஜெர்மனியிலிருந்து வந்த சகோதரர் வேண்டிக்கொள்வார்.

சிலவேளைகளில் தத்தமது நாடுகள் வெல்லவேண்டும் என்பதற்காக இவர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்ளும் அளவிற்கும் நிலைமை மாறிவிடும்.

அதாவது நம்மவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அவர்களுக்கு தமது தாய்நாட்டைவிட, தாம் புலம்பெயர்ந்து வாழ்க்கின்ற நாடுதான் அவர்களின் இதயங்களில் வாழ்கின்றது.

நம்மவர்கள் புலம்பெயர்ந்தபோது, அவர்கள் பிரான்ஸ் போகவேண்டும் என்றோ ஜெர்மனி போகவேண்டும் என்றோ விரும்பிப் போனவர்கள் அல்ல. ஏஜென்சிக்காரன் எங்கே சுலபமாக கொண்டுபோக முடியுமோ, அங்கே போய்ச் சேர்ந்தவர்கள். அவர்கள் இன்று அவற்றையே தத்தமது நாடாக வரித்துக்கொண்டனர்.

ஆனால் உலகில் எத்தனை நாடுகள் இருக்க, அமெரிக்காதான் சிறந்தது, அங்கேதான் போகவேண்டும் என்று அங்கு போனவர்கள் அமெரிக்காமீது எத்தகைய 'பாசத்தில்' இருப்பார்கள் என்பதை நாம் ஊகிக்கலாம். கரையொதுங்கிய நாட்டையே நேசிக்கின்றபோது, விரும்பிப் போய் கரைசேர்ந்த நாட்டின்மீது எப்படியொரு பாசம் இருக்கும்!

நமது நாட்டின் ஜனாதிபதியும், நிதியமைச்சரும் அவ்வாறு அமெரிக்காவை தெரிவுசெய்து போய்ச் சேர்ந்தவர்கள். இன்றும் தத்தமது பிள்ளைகளை அங்கேயே குடும்பங்களாக வைத்திருப்பவர்கள். அவர்களுக்கு அமெரிக்காமீது இருக்கக் கூடிய 'நெருக்கத்தை' அமெரிக்காவால் அறிந்துகொள்ள முடியாதா என்ன?

அமெரிக்க உயர்மட்டக் குழு ஒன்று தற்போது கொழும்பில் நிற்கின்றது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்ரோறியா நூலண்ட் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்திருந்தனர். இவர்களின் இந்த விஜயம் இலங்கைக்கு பல அழுத்தங்களை ஏற்படுத்தும், அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இவர்கள் போர்க்கொடி தூக்குவார்கள் என்றெல்லாம் ஆரூடம் சொல்லப்பட்டுவந்த நிலையில், பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் செய்ததையும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதையும் அவர்கள் பாராட்டியிருக்கின்றனர்.

தங்கள் நாட்டை நேசிக்கின்ற ஒருவர் ஜனாதிபதியாகவும் (முன்னாள் பிரஜை), தமது நாட்டின் பிரஜை ஒருவர் நிதி அமைச்சராகவும் இருக்கின்றபோது, அவர்களுக்கு இதைக் கூட செய்யாவிட்டால் நன்றாக இருக்காது என்று அமெரிக்கா நினைத்ததோ தெரியவில்லை.

போதாக்குறைக்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடாத்தவிருப்பதை பாராட்டிய அமெரிக்க அதிகாரி நூலண்ட், மாகாண சபைத் தேர்தல்களையும் விரைந்து நடத்துங்கள் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார்.

இந்த அழுத்தம் அரசுக்கு மாத்திரம் கொடுத்ததாக தெரியவில்லை. கூடவே அரசாங்கத்துடன் இன்று பேசவிருக்கும் கூட்டமைப்புக்கும்தான் போலும்.

**- ஊர்க்குருவி**

# அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டியில் வெற்றிபெற்றோருக்கு விருது வழங்கல்!



கொழும்பு, மார்ச் 25

அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டி - 2021 விருது வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரச ஊழியர்களின் ஆக்கபூர்வமான திறன்களை மேம்படுத்தி மதிப்பீடு செய்து அந்த படைப்புகளை வெளியிடுவதற்கான வாய்ப்பை வழங்குதல் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் பிரதமரின் பணிப்பின்பேரில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ், சிங்கள மொழிகளில் சிறுவர் கதைகள், கவிதைகள், பாடல்கள், குறுந்திரைப் படங்கள், சிறுகதைகள், புகைப் படங்கள் மற்றும் குறுநாடகங்கள் நாடு முழுவதிலுமிருந்து அரச ஊழியர்களால் போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து படைப்புகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன சிங்கள வெற்றிப் படைப்புகளான "பிரபாஸ்வர" மற்றும் தமிழ் வெற்றி படைப்புகள் மற்றும் வெற்றி பெற்ற இரண்டு சிங்களம் மற்றும் தமிழ் சிறுவர் நூல்களின் தொகுப்பை பிரதமரிடம் வழங்கிவைத்தார்.

சிங்கள மற்றும் தமிழ் குறு நாடக விருதுகளில் சிறந்த நாடகம், சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகைக்கான விருதுகளை பிரதமர் வழங்கினார்.

பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கும், "அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டி - 2021" இல் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

நிகழ்வில் தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன உள்ளிட்ட கலைஞர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# இளைஞர் பாராளுமன்றத்தினர் பங்களாதேஷ் தூதருடன் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 25

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹமத் ஸாதிக், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் ஆரிபுல் இஸ்லாமை சந்தித்தனர்.

பங்களாதேஷ் உயர்ஸ்கராலயத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் நாட்டில் கல்வி, விளையாட்டு, வெளிவிவகாரம் மற்றும் சுற்றுலா துறை போன்றவற்றில் இளைஞர்களின் பங்களிப்பு, அதிலுள்ள குறைபாடுகள் குறித்தும் மேலும் இந்தத் துறைகளில் பங்களாதேஷ் நாட்டின் இளைஞர்களின் பங்களிப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலின் பின்னர், இலங்கையின் வெளியுறவுத் துறை மற்றும் சுற்றுலா துறை மேலும் வளர்வதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் விசேடமாக இலங்கை, பங்களாதேஷ் இளைஞர்களின் உறவுகளை வலுப்படுத்தும் செயல் திட்டங்களுக்கான ஆதரவை எதிர்காலங்களில் வழங்குமாறும் கேட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# நூலக நிறுவனத்தின் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

நூலக நிறுவனத்தால் நடத்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 33ஆவது நிகழ்வாக "தேசத்துக் கோயில் - தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் தங்கராசா ஜீவராஜ் வளவாளராகக் கலந்துகொள்வார். ஒருங்கிணைப்பாளராக சுஜீவன் தர்மரத்தினம் செயல்படுவார். இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பங்கேற்க விரும்புவோர் சூம் செயலியில் 81415584 070 என்ற அடையாள இலக்கத்தைப் பயன்படுத்த முடியும்.

(ஐ)

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஈழத்துச் சித்தர் சிவயோகர் சுவாமிகள் நினைவு பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சிவயோக சுவாமிகளின் மகா சமாதி தினத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வரும், அமெரிக்காவின் ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவருமான ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் "யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும், சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.03.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## புலம்பெயர் சமூகத்துடன் பேசுதல்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - ஐ. நா. செயலாளர் நாயகத்தை சந்தித்தபோதும், புலம்பெயர் சமூகத்துடன் பேசுவது தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர், இந்திய வெளியுறவுச் செயலருடன் பேசுகின்ற சந்தர்ப்பத்திலும், புலம்பெயர் சமூகத்துடன் பேசுவது தொடர்பில் பேசியிருந்தார். தற்போது, இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்ரோறியாவுடன், பேசுகின்ற சந்தர்ப்பத்திலும், புலம்பெயர் சமூகத்துடன் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரியிருக்கின்றார்.

ஜனாதிபதி உண்மையிலேயே தமிழ் புலம்பெயர் சமூகத்துடன் பேச விரும்புகின்றாரா? அரசாங்கத்தின் பக்கத்தில் இதற்கான முயற்சிகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதா? அல்லது, அரசாங்கம் இதனை ஒரு தந்திரோபாயமாக முன்வைக்கின்றதா?

இது தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிடுகின்றபோது, தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் எவற்றுடனும் அரசாங்கம் தொடர்புகளை மேற்கொள்ளாது என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறாயின் ஜனாதிபதி விரும்பும் புலம்பெயர் சமூகம் எது? ஆனால், அரசாங்கம் தடைப் பட்டியலில் உள்ளடக்கியிருக்கும் அமைப்புக்கள் அனைத்துமே, புலம்பெயர் சூழலில் இயங்கும் பிரதான அமைப்புக்களாகும். அவைகளே சர்வதேச அளவில் தமிழ் "லொபி"யில் ஈடுபட்டுவருகின்றன. அவர்களை தவிர்த்து சந்திப்பதாயின், யாரை சந்திப்பது?

அரசாங்கம் தடைப் பட்டியலில் இட்டிருக்கும் அமைப்புக்களில், உலகத் தமிழ் பேரவையும் ஒன்று. ஆனால், உலகத் தமிழர் பேரவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்தே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தன. இந்த நிலையில் அந்த அமைப்பை அரசாங்கம் தடை செய்திருப்பதாகக் கூறுவதும் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது.

கூட்டமைப்பும் அரசாங்கத்தின் தடைகளை கருத்தில் கொண்டு செயல்படவில்லை. கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் மாறுபட்ட அபிப்பிராயங்களை கொண்டிருந்தாலும்கூட, பிரதான கட்சியான தமிழ் அரசு கட்சியின், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், உலகத் தமிழர் பேரவையுடன் நெருங்கிச் செயல்பட்டு வருகின்றார். அண்மையில், கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் இணைந்து, தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலையீட்டை கோரி, அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தன.

ஆனால், புலம்பெயர் தமிழ் சூழலில் உலகத் தமிழர் பேரவை தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ளவர்களும் உள்ளனர். இதனையும் அரசாங்கம் அறியும். இந்த நிலையில் புலம்பெயர் சமூகத்துடன் பேசுவதாயின் யாருடன் பேசுவது என்னும் கேள்வியும் உண்டு. இதனை கருத்தில் கொண்டுதான், ஜனாதிபதியும் அவ்வப்போது புலம்பெயர் சமூகம் தொடர்பில் பேசி வருகின்றாரோ? ஏனெனில், களத்திலும் புலத்திலும் தமிழ்த் தேசிய தரப்புக்கள் பேரம் பேசும் நிலையில் இல்லையென்பதை அரசாங்கம் நன்கறியும்.

# அரசிடம் பரந்த தூரநோக்கு இல்லை என்பதை உணர்த்திய சம்பந்தன்!

**அலசுவது இராஜதந்திரி**



இலங்கையின் இன்றைய இக்கட்டான பொருளாதார நிலவரம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வகட்சி மகாநாடொன்றை நேற்று முன்தினம் தமது செயலகத்தில் கூட்டியிருந்நதார்.

பல முன்னணி தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில் ஜனாதிபதியின் சர்வகட்சி மகாநாடு அவரது செயலகத்தில் நடத்தப்பட்டிருந்தது.

தென்னிலங்கை மக்களிடையே இன்று காணப்படுகின்ற பரவலான அபிப்பிராயம் என்னவெனில் முப்பது வருட கால கொடிய வடக்கு - கிழக்கு யுத்தத்தின்போதுகூட நிலவி யிருக்காத பொருளாதார பிரச்னை இன்று போர் முடிந்தபின்னர் இலங்கையில் மிக மோசமாக நிலவுகின்றதென்பதாகும்.

இன்றைய ஆட்சியாளரிடம் தூரநோக்கோடு கூடிய உறுதியான பொருளாதார திட்டம் எதுவும் காணப்படவில்லை. அவர்கள் வெறுமனே பதவி ஆசை பிடித்தவர்களாகவே இருக்கின்றனர் என்பதே அரசியல் மற்றும் பொருளாதார அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது.

அடுப்பிலிருந்து நெருப்பில் வீழந்தது போன்றே கொடிய யுத்தத்திலிருந்து மீண்டுள்ளபோதிலும் தற்போது மோசமான பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடைந்ததுமே வெற்றிக்களிப்பில் ராஜபக்ஷ தரப்பினர் காலத்தை கழித்தனரே தவிர, அவர்களிடம் ஒரு தூரநோக்கோடு கூடிய ஆக்கபூர்வமான பொருளாதார திட்டமோ அல்லது ஒரு நீண்டகால யுத்தத்தக்கு அடிப்படைக் காரணமாக இருந்த வடக்கு-கிழக்கு பிரச்னையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான தீர்வுத் திட்டமோ காணப்பட்டிருக்கவில்லை.

இதன்காரணமாகவே முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கான அடிப்படை காரணிகள் இன்றுவரை முனைப்புடன் இருக்கின்ற காரணத்தால் தற்போதைய அரசாங்கத்தால் ஆரோக்கியமான ஒரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதுள்ளதென்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கூட்டியிருந்த சர்வகட்சி மகாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

மூத்த அரசியல்வாதியான இரா. சம்பந்தன் கூறியதில் அர்த்தம் நிறைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. அரசியல் ரீதியான காரணிகள் மட்டுமல்ல. மனிதாபிமான காரணிகளும் நாட்டை பொருளாதார ரீதியாக சீர்குலைத்துள்ளது. இதனை வெளிப்படுத்துவதாகவே அண்மையில் வட பகுதிக்கு பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தபோது அங்கு ஆக்ரோஷமாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் புலப்படுத்தியிருந்தன.

இதேவேளை தென்னிலங்கை மக்களை பொறுத்தவரை மத்திய தர மற்றும் அதற்கு கீழ்ப்பட்ட வாழ்க்கை தரத்தை கொண்டுள்ளவர்களாகவே அநேகர் இருக்கின்றனர்.

இதன்காரணமாக அந்த மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது திணறிக் கொண்டிருக்கின்றனர்.


தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டதுபோல அதிகாரப் பரவலாக்கத்துடன்கூடிய ஒரு தீர்வை ஆட்சியாளர்கள் வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பாக ஏற்படுத்தியிருப்பார்களேயானால் அவ்விரு மாகாணங்களின் மூலவளங்களும் உரிய வகையில் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும். அதன் மூலம் நாட்டின் பொருளாதாரமும் மேம்பட்டிருக்க முடியும் எனவும் சம்பந்தன் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இரா. சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டதை நோக்கும்போது எழுபதுகளின் ஆரம்பத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின் போது நிலவிய இக்கட்டான பொருளாதார நிலவரமே அன்று மக்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியிருந்தது. ஆயினும், வடபகுதி விவசாயிகளின் பங்களிப்பால் உள்ளூர் உற்பத்திகள் மூலம் ஓரளவு நாட்டின் பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக்கூடிய நிலையிலிருந்தது.

எனவே இன்று உலக பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாடும் ஒன்றையொன்று பெரிதும் தங்கி வாழுகின்ற நிலையே காணப்படுகின்றது. இதனை நன்கறியாத நிலையில் சரவதேச சமூகத்தோடு பெரிதும் பகமை பாராட்டிய நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை குட்டிச்சுவாராக்கி மக்களை அத்தியாவசிய பண்டங்களுக்காக வீதிகளில் இறங்க வைத்துள்ளது இன்றைய அரசாங்கம்.

இன்று அத்தியாவசிய பொருட்களுக்காக வீதிகளில் பரிதவித்து நிற்கும் மக்கள் வெகு விரைவில் ஓர் ஆட்சி மாற்றத்துக்காக லிபியாவில், அல்லது துனிசியாவில் போன்று மாபெரும் கிளர்ச்சிகளில் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்து முன்னேறுவீர்கள். கையில் பணம் புரளும். புதிய வேலையில் சேருவீர்கள். குடும்பத்தினருடன் நல்லுறவு மலரும். பயணம் ஏற்பாடாகும்.

**இடபம்**

புதிய பொறுப்புக்கள், சலுகைகள் கிடைக்கும் நாள். தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். பரபரப்பான நாள். அலுவலகத்தில் நெருக்கடி நீங்கி நிம்மதி பிறக்கும்.

**மிதுனம்**

தொழில் சீராக இருக்கும். முயற்சியில் வெற்றி உண்டு. சுயதொழில் தொடங்குவீர்கள். வெளிநாட்டுப் பணம் வரும். மேலதிகாரியுடன் இருந்த மோதல் முடிவுக்கு வரும்.

**கடகம்**

எதிர்த்தவர்கள் விலகுவர். தாயார் மீது அக்கறை தேவை. கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்த நண்பர்கள் இணைவர். பிள்ளைகளின் செயல்பாடுகளில் முன்னேற்றம் வரும்.

**சிம்மம்**

வியாபாரத்தில் லாபம் வரும். உடன்பிறப்புகள் உதவி செய்வர். பிரிந்த நண்பர்கள் இன்று இணைவர். குழப்பம் நீங்கி தெளிவடைவீர்கள். வியாபாரத்தில் ஆர்வம் கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**

குடும்பத்தினர் உங்கள் மீது பாசம் காட்டுவர். நன்மைகள் கூடும். அரசாங்க விஷயம் அனுகூலமாக முடியும். நிம்மதி கிடைக்கும். பெற்றோர்கள் உங்களை புரிந்து செயல்படுவர்.

**துலாம்**

கலகலப்பு அதிகரிக்கும். குழந்தைகள் உங்களை பெருமிதப்படுத்துவர். பணியாளர்களுக்கு திருப்திகரமான நாள். மகிழ்ச்சி கூடும். காதலர்களுக்கு நன்மை வரும். லோன் அனுமதி கிடைக்கும்.

**விருட்சிகம்**

பலநாள் காத்திருந்த விஷயம் இன்று நல்ல முடிவுக்கு வரும். உங்களின் பேச்சும், செயலும் நேர்மையாக இருக்கும். மகிழ்ச்சி கூடும். தேவையற்ற கற்பனையால் மனக்கலக்கம், பயம் ஏற்படும்.

**தனுசு**

வெளியிடங்களில் புதிய மனிதர்களிடம் கவனமாக இருக்கவும். இன்று செய்யும் பணியில் கவனத்துடன் செயல்படவும். பொருட்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்**

குழந்தை பாக்கியம் எதிர்பார்ப்பவர்களுக்கு நற்செய்தி கிடைக்கும். தேவையற்ற சிறியதொரு மனக்கவலை வந்து போகும். நிதானமான செயலால் வரவு அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**

நீங்கள் நினைத்த விஷயம் தடைக்குப் பின் இனிதே நடந்தேறும். உங்களின் வாக்குவன்மையால் பொருளாதாரநிலை மேம்படும். தாராளமாகச் செலவு செய்து சந்தோஷப்படுவீர்கள்.

**மீனம்**

பிறரிடம் பேசும் போது நிதானத்தை கையாள்வது நல்லது. செலவுகளால் நன்மையும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. நிதிநிலை சீராகும் நாள்.

# சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு அனுமதி மறுப்பு

## சட்டப் பேரவையிலிருந்து அதிமுக வெளிநடப்பு

*சென்னை, மார்ச் 25*

தமிழகத்தில் நிலவி வரும் சட்டம் ஒழுங்கு பிரச்னை குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறி சட்டப்பேரவையிலிருந்து அ.தி.மு.கவினர் வெளிநடப்பு செய்தனர்.

தமிழக சட்டப்பேரவையில் 2022 23 பட்ஜெட் மீதான விவாதம் நடந்து வருகிறது. நேற்று நிதித்துறை கோரிக்கைகளுக்கு நிதியமைச்சர் பதிலளித்தார். இந்நிலையில், தமிழக சட்டம், ஒழுங்கு பிரச்சினை குறித்து பேச அதிமுக அனுமதி கோரியது. அனுமதி மறுக்கப்பட்டதால் அவையிலிருந்து அ.தி.மு.கவினர் வெளியேறினர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, “சட்டப்பேரவையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசும்போது, நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் அவையில் இருந்து வெளியேறினார். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். அதிமுக ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் 97% நிறைவேற்றப்பட்டு விட்டன.

ஆனால் சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தவறான தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

தி.மு.க. வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக முதல்வர் ஸ்டாலின் கூறியிருக்கிறார். அந்த 208 வாக்குறுதிகளில் பல சின்னச் சின்ன வாக்குறுதிகள். அப்படிப் பார்த்தால் அதிமுக ஆட்சியில் இதுபோன்ற நிறைய வாக்குறுதிகளை நாங்கள் செய்திருக்கிறோம்” என்றார்.

# பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வரும் ஈழத்தமிழருக்கு ஆதரவளிப்பது எமது கடமை

## வலியுறுத்துகின்றார் தினகரன்

*சென்னை, மார்ச் 25*

“தமிழகத்தையொட்டிய கடற்பகுதியிலுள்ள திட்டுகளில் நிராதரவாக இறக்கிவிடப்படும் இலங்கைத் தமிழர்களை கடலோரக் காவல் படையும், இந்திய கடற்படையும் பாதுகாப்பாக அழைத்து வந்து கரை சேர்க்க வேண்டும்” என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால் நமது தொப்புள் கொடி உறவான தமிழர்கள் பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக தமிழகம் வரத் தொடங்கியிருப்பது கவலையளிக்கிறது. அப்படி வருகிறவர்களை எந்த வித இன்னலுக்கும் ஆளாக்காமல் ஆதரவளிக்க வேண்டிய கடமை தாய்த் தமிழகத்தின் அரசுக்கு இருக்கிறது.

தமிழகத்தையொட்டிய கடற்பகுதியிலுள்ள திட்டுகளில் நிராதரவாக இறக்கிவிடப்படும் இலங்கைத் தமிழர்களை கடலோரக் காவல் படையும், இந்திய கடற்படையும் பாதுகாப்பாக அழைத்து வந்து கரை சேர்க்க வேண்டும். இப்பணிகளை உள்ளார்ந்த அக்கறையோடு மத்திய, மாநில அரசுகள் செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தினகரன் கூறியுள்ளார்.

# தி.மு.கவுடன் சிறந்த புரிதலோடு இயங்கும் ம.தி.மு.கவில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி

## வைகோ

தி.மு.கவோடு நல்ல புரிதலோடு, ஐக்கியமாக ம.தி.மு.க. இயங்கி வருகிற சந்தர்ப்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிற விதத்தில் கட்சியில் இருந்து சென்றுள்ளவர்கள் செயல்பட்டதாக, அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

செய்தியாளர்களை சந்தித்த மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கூறியது: “ஊரக உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் தி.மு.கவுடன் உடன்பாடு வைத்து பல இடங்களிலே வெற்றி பெற்றிருக்கின்றோம். அதன்பிறகு தற்போது நடந்த உள்ளாட்சி, நகராட்சித் தேர்தலில் திமுகவுடன் உடன்பாடு வைத்து தமிழகத்தின் பல இடங்களில் பரவலாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர் மற்றும் பேரூராட்சி தலைவர் பதவிகளில் வெற்றி பெற்றிருக்கின்றோம்.

எனவே, திமுகவோடு நல்ல புரிதலோடு, ஐக்கியமாக நாங்கள் இயங்கி வருகிற சந்தர்ப் பத்தில் குழப்பத்தை ஏற்படுத் துகிற விதத்தில், இவர்கள் நாம் அங்கே போயிருந்தால் அதிக இடங்கள் கொடுத்திருப்பார்கள் என்றெல்லாம் கூட சிலரிடம் பேசி பார்த்தார்கள். எந்தவிதமான பிரச்னையும் இல்லை. இந்தப் பொதுக்குழுவில் நல்ல தீர்மானங்கள், தமிழகத்தை பாதுகாக்க, திமுக அரசு முன்னெடுக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை வரவேற்றிருக்கிறோம், பாராட்டியிருக்கிறோம், போராடுவதற்கு தயாராக இருக்கிறோம். டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்திருக்கிறோம்” என்று அவர் கூறினார்.

# அரசியலில் வெற்றி, தோல்வி, சகஜம் எங்கள் இடத்தை நாங்கள் பிடிப்போம்

## பிரேமலதா உறுதி

*சென்னை, மார்ச் 25*

அரசின் சுமையை மக்களின் மீது திணிக்கின்றனர். அரசு மக்களுக்காத்தான் உள்ளது. சுமையை மக்களின் மீது சுமத்தாமல் அரசு நடந்து கொள்ள வேண்டும். அரசியலில் வெற்றி, தோல்வி, சகஜம். 10 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாத கடசி இன்று ஆட்சி அமைக்கவில்லையா? 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த கட்சி என்று ஆட்சியில் இல்லாமல் இருக்கின்றது. அரசியலில் இது சகஜம் தான், எங்கள் இடத்தை நாங்கள் பிடிப்போம்.

இவ்வாறு கூறியிரக்கிறார் பிரேமலதா விஜயகாந்த். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

மக்களுக்கான ஒரு நல்ல திட்டம், மக்களை போய் சேர வேண்டிய திட்டத்தை ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது எனற ஒரே காரணத்திற்காக மாற்றுவதோ, நிறுத்தவதோ சரியில்லை. பெண்கள் வரவேற்கும், பெண்களுக்கு பயன் அளிக்கக் கூடிய எந்த திட்டத்தையும் இந்த திமுக., பெயரிலாவது தொடர்ந்து நடத்த வேண்டும் எனக் கூறினார்.

## ஆண்டவரின் அடிமை



இன்றைய நற்செய்தியிலர் இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப் படுகின்றது. எவரும் பிறக்கும்போது இவர்தான் என் தாய் என் தாய் என்று தாயைத் தெரிவு செய்வதில்லை. ஆனால் இயேசு மட்டும் தன்னுடைய தாயாரை தெரிவு செய்து இந்த உலகிலேயே மனிதனாகப் பிறந்தார்.


மரியா எனும் சொல்லின் அர்த்தம் "இறைவனால் அன்பு செய்யப்பட்டவள்" என்பதாகும். மரியா உயர்ந்தவர் ஏனெனில் என்றும் வாழும் கடவுளை மகனாகப் பெற்றெடுத்தவர். மெசியா வின் தாய்மைப் பதவி அவருக்கு அளிக்கப்படுகின்றது. அப்பணி யிலே இறைவன் மரியாளுக்கு துணை நிற்பார். என்பதையே "ஆண்டவர் உம்முடனே" என்ற தொடர் காட்டுகின்றது.

இந்த மங்கள வாழ்த்தின் பொருள் மரியாவுக்கு விளங்க வில்லை. "மரியே அஞ்சாதீர்; கடவுளின் அருளை அடைந்துள் ளீர் ; இதோ உமது வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்" என்று கூறப்பட்டபோது மரியாள் உடனே "இதோ ஆண்டவரின் அடிமை உஎமது வார்த்தையின் படி எனக்கு ஆகட்டும்" என்று இறை சித்தத்திற்கு முற்றும் முழுவதுமாக தன்னைக் கையளித்தார்.

"இதோ உம் அடிமை எம் விருப்பப்படியே ஆகட்டும்" என்று பதில் கூற நாம் தயாரா?

**- அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# அதிகரிக்கின்றது டெங்கு அபாயம்!



## கடந்த வாரம் 733 நோயாளர்கள் அடையாளம்

கொழும்பு, மார்ச் 25

**இலங்கையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த வாரத்தில் மாத்திரம் 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 12,034 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட் டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதி வாகியுள்ள அதேவேளை யாழ். மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவா கியுள்ளனர். நாடளாவிய ரீதியில் 47 சுகா தார வலயங்கள் டெங்கு அபாய வலயங்களாக இனங் காணப் பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கண்டி தீ விபத்தில் உயிரிழப்பு!



## நான்கு வீடுகளுக்கு சேதம்

கொழும்பு, மார்ச் 25

கண்டியில் ஏற்பட்ட தீவித்து சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர்.

கண்டி - கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புற பகுதியில் ஏற்பட்ட தீ பரவலில் சிக்கியே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலியாகினர்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த தீ பரவலில் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தீ பரவல் காரணமாக 4 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகள் மற்றும், மேலும் ஒரு இளைஞன் ஆகியோர் உயிரிழந்துடன் தாய் காயமடைந்த நிலையில் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சா ளர் கூறினார்.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. (அ)



# அச்சுவேலி மத்திய கல்லூரியின் அலுவலகத்தை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 25

அச்சுவேலி மத்திய கல்லூரி யின் அலுவலகம் உடைக்கப் பட்டு கணினி திருடப்பட்டுள் ளது என்று பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மின்வெட்டு காலப்பகுதியில் இடம்பெற் றுள்ளது என்று தெரிவிக்கப்படு கிறது.

பாடசாலையில் சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தப்பட் டுள்ள நிலையில் மின்வெட்டு வேளை அவை இயங்காத போது அலுவலகத்தின் கதவு உடைக்கப்பட்டு ஒரு லட்சம் பெறுமதியான கணினி திருடப் பட்டுள்ளது.

பாடசாலைக்கு முன்பாக பொலிஸ் காவல் உள்ள நிலை யில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ள னர். (அ-03)

# தங்கத்தின் விலை அதிகரிப்பு; நகைக்கடை ஊழியர் பாதிப்பு

மன்னார், மார்ச் 25

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பண வீக்கம் காரணமாக மன்னார் மாவட் டத்தில் நடுத்தர மற்றும் சிறு நகைக்கடை உரிமையாளர்கள் உள்ளடங்கலாக நகை தொழி லகங்களில் பணிபுரியும் ஊழி யர்களும் பாதிக்கப்பட்டுள்ள னர்.

விலைவாசி அதிகரிப்பு, பொருட்களுக்கான தட்டுப் பாடு, வருமானம் இன்மையால் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாகவும், தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதி கரித்து வருகின்றமையால் நகை கொள்வனவுகள்பெருமளவில் குறைவடந்துள்ளதாகவும் மன்னார் நகைக்கடை உரிமை யாளர்கள் மற்றும் ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக இந்த மாத ஆரம் பத்தில் இருந்து 24 கரட் தங்கம் ஒரு லட்சத்து 58 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வரை அதிகரித் துள்ளமையால் மக்கள் நகை கொள்வனவுகளில் ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து வருவ தாகவும் இதனால் விற்பனை சடுதியாக குறைந்துள்ளதாகவும் நகை விற்பனை நிலைய உரிமை யாளர்கள் கவலை தெரிவித்த னர். (அ)






# பளையில் மின்னல் தாக்கம்!

வடமராட்சி, மார்ச் 25

பளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பேராலை பகுதியில் நேற்று முன்தினம் வீடொன் றில் மின்னல் தாக்கியுள்ளது.

பளை பேராலைப் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே குறித்த சம்பவம் இட்மபெற் றுள்ளது.

மாலை இடியுடன் கூடிய மழை பெய்துகொண்டிருந்த வேளை வீட்டில் இருந்த அனை வரும் முன் ஹோலில் இருந்துள் ளனர். இதன்போது பாரிய சத்தத்துடன் மின்னல் வீட்டின் கூரைப் பகுதியிலேயே தாக்கி யுள்ளது.

இதனையடுத்து மின் குமிழ் களும் வெடித்துச் சிதறியுள் ளது. மின்சாரமும் முற்றாக துண்டிக்கப்பட்டது.தெய்வா தீனமாக வீட்டில் இருந்த எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. (அ-02)

# எரிபொருள் நிலையங்களில் முழு இராணுவப் பிரசன்னம்




வடமராட்சி, மார்ச் 25

நாட்டில் ஏற்ப்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் நாட்டில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங் களிலும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு வழங்கப்படும் எரி பொருட்களின் அளவு விவரங் களை அவர்கள் சேகரித்து வருகின்றனர்.

இருப்பினும் பங்கிட்டு அட்டை ஒன்றுக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் சிலர் தெரிவித்தனர்.

ஆயினும் இரவு வேளை களில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தாராளமாக-இரகசியமாக எரிபொருள்கள் வழங்கப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-02)



# கிளிநொச்சியில் நேற்று பெரும் விபத்து! உயிர் தப்பினார் சிரேஷ்ட சட்டத்தரணி!!

கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் பெரும் விபத்து சம்பவம் நேற்று காலை இடம் பெற்றது. இந்த சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் கந்த சுவாமி ஆலயம் முன்பாக நடந்தது.

சொகுசுக் கார் ஒன்று வீதியின் மறுபக்கத்துக்கு கடக்க முற்பட்டபோது யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரிப்பர் வாகனம் மோதியுள்ளது. விபத்தில் சிக்கிய கார் பலத்த சேதமடைந்தது.

எனினும் காரில் பயணித்த சிரேஷ்ட சட்டத்தரணி சிவ பாலசுப்ரமணியம் அதிஷ்டவசமாக எவ்வித பாதிப்புமின்றி தப்பித்தார்.

இதன்போது ஏ-9 வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலை கூடியிருந்த இளைஞர்களின் உதவியுடன் பொலிஸார் சீர்செய்தனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அரசியல் தீர்வு குறித்தே ஜனாதிபதியுடன் பேச்சு

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 25

**ஜனாதிபதியுடன் இடம்பெறவுள்ள கூட்டத்தின்போது, அரசியல் தீர்வு குறித்தே அவதானம் செலுத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.**

ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ நிராகரித்துள்ள நிலையில் குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்ட நாட்களாக ஒத்தி வைக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நாளை (இன்று) இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பில், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இதன்போது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்தே அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

அவ்வாறு, தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கான இணக்கம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழர்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான இணைப்பு பாலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழும்.

எவ்வாறாயினும், அதிகாரப்பகிர்வு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வுக்கான பணிகளை அரசாங்கம் முன்னெடுத்தால் மாத்திரமே இது சாத்தியமாகும் - என்றார். (அ)

# பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 25

“அனைவருக்கும் இனிமையான பயணம்” எனும் தொனிப்பொருளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று யழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான சுலோகங்கள் அடங்கிய ஸ்ரிக்கர் வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஆரம்பமானது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து பொதுப் போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்காக இந்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளரும், தற்போதைய தேசிய பெண்கள் குழு உறுப்பினருமான திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ் மத்திய பஸ் நிலைய முகாமையாளர், மாவட்ட செயலக அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனபலரும் கலந்துகொண்டனர். (அ-03)





# ஓ.எல். பரீட்சையில் மாற்றமில்லை திட்டமிட்டபடி மே மாதம் நடக்கும்



கொழும்பு, மார்ச் 25

கடந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தர பரீட்சைகள் திட்டமிட்டபடி மே மாதம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இந்த விடயத்தைக் குறிப்பிட் டார்.

2022ஆம் கல்வி ஆண்டுக்கான பாடப் புத்தகங்களில் 38 மில்லியனுக்கும் அதிகமானவை அச்சிடப்பட்டு பிரதான களஞ் சியசாலைகளில் வைக்கப்பட் டுள்ளதுடன் பாடசாலைகளுக் கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள் ளன.

இவ்வாண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பமாகும்போது முழுமையாக பாடப் புத்தகங்கள் வழங்கும் பணிகள் நிறைவடையும் எனவும் அவர் கூறினார். (அ)

# பாடப் புத்தகங்களில் 92 வீதம் விநியோகம்!

கொழும்பு, மார்ச்

2022ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாடப் புத்தகங்களில் 92 வீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 2338.5 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், அச்சிடப்பட வேண்டிய பாடப்புத்தகங்கள் அடுத்த தவணை ஆரம்பமாவதற்கு முன்பே அச்சிட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# 16 இந்திய மீனவர்கள் இரு பகுதிகளில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் இரண்டு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல இரணைதீவு அருகே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு முழங்காவில் கடற்படை முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-03)

# அரசை பதவி விலகக் கோரி தீ பந்தம் ஏந்தி போராட்டம்!

கொழும்பு, மார்ச் 25

பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்வெட்டு, எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து காலி வக்வெல்ல சந்தியில் நேற்று முன் தினம் இரவு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

தாங்கள் பட்டினியால் வாடுவதாகக் கூறி அப்பகுதி மக்கள் பலர் தீ பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அரசாங்கம் உடனடியாக அதிகாரத்தை கைவிட்டு இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை காப்பாற்றக்கூடிய அரசாங்கத்தை நியமிக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ)

# பக்கச்சார்பாக செயற்படும் வடக்கு கல்வி அதிகாரிகள்!

## அனுமதிக்கமாட்டோம் என்கிறார் ஜோசப் ஸ்டாலின்

கொழும்பு, மார்ச் 25

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்று உள்ளதாக அறிகின்றோம். இந்தக் கூட்டம் தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு உரிய முறையில் தகவலெதுவும் வழங்கப்படவில்லை. இலங்கை ஆசிரியர் சங்கத்தை திட்டமிட்டு புறக்கணித்து எடுக்கப்பட்டுள்ள பக்கச் சார்புடைய எந்தவொரு ஒரு தீர்மானங்களுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் உடன்படப்போவதில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் பொறுப்பேற்ற, திட்டமிடப்படாத, பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளால், சிக்கலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் இடமாற்ற நடைமுறைகளுக்கு வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் பலிக்கடாவாக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப் போவதில்லை.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தொடர்ச்சியாக, இடமாற்ற சபை தீர்மானங்களை மீறி, இடமாற்றச் சபையின் அனுமதியின்றி, பதிலீட்டு இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு பல வருடகாலங்களாக இடமாற்றங்களை ஒத்தி வைத்துள்ளார்.

அதேவேளை, ஒரே வருடங்களில் வழங்கப்பட்ட பதிலீட்டு இடமாற்றங்களின் போது, ஒரு பகுதியினருக்கு மீள்வரும் திகதி குறிப்பிட்டும், இன்னொரு பகுதியினருக்கு திகதி குறிப்பிடாமலும் பாரபட்சமான முறையில் இடமாற்றங்களை செயற்படுத்தி இருக்கின்றார்.

ஒரே பகுதி இடமாற்றங்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் மூலம் பாரபட்சங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை, கோவிட்-19 தொற்று காலத்தின் நெருக்கடி நிலையில் நாடு இருந்தபோது, அந்த காலகட்டத்தில் இடமாற்ற சபையின் அனுமதி பெறப்படாமல் ஒரு சிலருக்கு வெளிமாவட்டங்களில் இருந்து சொந்த மாவட்டத்துக்கு முறையற்ற வகையில் இடமாற்றங்களை வழங்கியுள்ளார்.

மருத்துவக் காரணங்களுக்காகவும், குடும்ப நெருக்கடிகளுக்காகவும் தமது சொந்த வலயங்களுக்கு தற்காலிக இணைப்பு கோரி நிற்கும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்குக்கூட, பல இழுத்தடிப்புகளை செய்துவரும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ். மாவட்டத்தில் இருந்து, வெளிமாவட்ட சேவை எதனையும் செய்திராத பலரை தொடர்ச்சியாக பாதுகாத்து பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றார்.

இவ்வாறான பக்கச்சார்பான செயற்பாடுகளால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் முறையற்ற இடமாற்ற நடைமுறைகளால் வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதை இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப் போவதில்லை.

எனவே இடமாற்றங்கள் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான தீர்மானங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு தெரிவிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றார். (அ)

# வங்குரோத்து நிலை!

## ஹர்ஷ டி சில்வா தகவல்

கொழும்பு, மார்ச் 25



அரச வங்கியொன்று வங்குரோத்து நிலையில் காணப்படுவதாக நேற்று காலை தகவல் வெளியாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்று அவர் பாராளுமன்றில் உரை நிகழ்த்தும் போதே இதனைத் தெரிவித்தார்.

“இவ்வாறு இருந்தால், அது ஒரு பேரழிவாகவும், ஒரு பேரழிவின் தொடக்கமாகவும் இருக்கலாம்” என்று அவர் கூறினார்.

நாட்டின் கேள்விகளுக்கு பதிலளிக்க நிதி அமைச்சரோ அல்லது பொறுப்பான எவரும் ஒருபோதும் பாராளுமன்றத்துக்கு வரமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வீடுகளில் எரிபொருள்களை சேமிப்பதால் புதிய அபாயம்

## தீ விபத்துக்கள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 25

நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் வீட்டில் எரிபொருளை சேமித்து வைப்பதால் எரிபொருள் தொடர்பான விபத்துக்கள் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் கயான் முனசிங்க ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தீ விபத்துக்கள் மற்றும் எரிபொருள் தொடர்பான விபத்துக்கள் காரணமாக நாடு ஆபத்தான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளது.

வீடுகளில் எரிபொருள் சேமிப்பு வசதிகள் இல்லாததால் பெற்றோல் போன்ற எரிபொருளை சேமித்து வைப்பது ஆபத்தானது.

பெற்றோல் ஆவியாவதால், காஸ் குக்கரை பற்ற வைப்பது, தீப்பெட்டியை பற்ற வைப்பது அல்லது மின்விளக்கை எரிப்பது போன்ற ஒரு சாதாரண சம்பவம் வீட்டில் தீப்பிடிக்க நேரிடும்.

கடந்த சில நாட்களாக எரிபொருள் தொடர்பான விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், பல வீடுகள் தீப்பிடித்து எரிந்தன.

ஜனவரி மாதம் வரை நாளாந்தம் ஒன்று அல்லது இரண்டு பெற்றோல் தொடர்பான தீக்காய நோயாளிகள் மட்டுமே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். தற்போது நான்கு முதல் ஆறு நோயாளிகள் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஏறக்குறைய 20 வீத நோயாளிகள் ஆபத்தான கட்டத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

60 வயதிற்கு மேற்பட்ட நோயாளிகள் குறிப்பாக நீரிழிவு அல்லது அடிப்படை இதய நிலைகள் போன்ற தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஒரு சிறிய தீக்காயமும் ஆபத்தானது - என்றார். (அ)

# ரயில் கட்டணங்கள் ரகசியமாக உயர்வு

கொழும்பு, மார்ச் 25

நகரங்களுக்கிடையிலான, நீண்ட தூர சேவைகள் மற்றும் விசேட அதிவேக ரயில்களுக்கான ரிக்கெற் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

சில ரயில்களில் கட்டணங்கள் 60 வீதத்தாலும் சில ரயில்களின் கட்டணம் 50 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரயில் திணைக்களத்தின் மரபுப்படி மாதத்தின் முதலாம் திகதி கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், வரலாற்றில் முதன்முறையாக, தற்போதைய ரயில்வே பொது முகாமையாளர் எவ்வித நடைமுறையும் இன்றி, நிலைய அதிபர்களுக்கு தெரிவிக்காமல் கட்டணத்தை உயர்த்தியுள்ளார் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த நேரத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது பொருத்தமானதல்ல எனத் தெரிவித்த சோமரத்ன, சாதாரண மற்றும் பருவப் பயணச் சீட்டுக் கட்டணங்களும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக குறிப்பிட்டார். (அ)

# பந்துக்குள் ஹெரோய்ன்!

கொழும்பு, மார்ச் 25

ரப்பர் பந்தொன்றுக்குள் சூட்சுமமான முறையில் ஹெராய்னை மறைத்து வைத்து, மாத்தறை சிறைச்சாலைக்குள் வீசிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர் ஈ- காஷ் மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டு நீண்டகாலமாக இந்த வர்த்தகத்தை செய்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த சந்தேக நபர் படகொன்றில் வந்து ஹெரோய்ன் அடங்கிய பந்தை சிறைச்சாலைக்குள் வீசிவிட்டு அந்தப் படகிலேயே சென்று விடுவதால் இவரை கைது செய்ய முடியாமல் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைவஸ்து மட்டுமின்றி கைத்தொலைபேசி, சார்ஜர், சிகரெட், புகையிலை போன்ற பல்வேறு பொருட்களையும் இவர் இதே விதமாக சிறைச்சாலைக்குள் வீசியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நபரை கைது செய்வதற்காக மாத்தறை சிறைச்சாலைக்கு அருகே பல நாட்களாக பொலிஸார் சிவில் உடையில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதன் பின்னரே 22ஆம் திகதி இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்படும்போது இந்த நபரிடமிருந்து 89 00 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் 5400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 15000 மில்லிகிராம் ஹசிஸ் போதைப்பொருள் மற்றும் ,28350 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உலக காச நோய் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி!

வவுனியா, மார்ச் 25

உலக காச நோய் தினமான நேற்று வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது.

காச நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்ட வைத்தியசாலை காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

இதன்போது காச நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்று காலை 09.30 மணிக்கு காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் பின்னர் “காச நோயை முடிவுக்கு கொண்டு வர முதலிடுவோம், உயிர்களை காப்பாற்றுவோம்” எனும் தொனிப்பொருளில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி இடம்பெற்றது.




இப்பேரணி காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவில் இருந்து வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக பஜார் வீதியை அடைந்து மீண்டும் வைத்தியசாலையை அடைந்தது.

இப்பேரணியில் காச நோய் தொடர்பான பதாதைகளை ஏந்தியவாறு வைத்தியர்கள், தாதியர் கல்லூரி மாணவர்கள், சுகாதாரப் பிரிவினர் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 17,553 பேருக்கு காச நோய் தொடர்பான பரிசோதனைகள் செய்யப்பட்டு 336 பேர் அடையாளங் காணப்பட்டதுடன், 48 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# மீண்டும் தமிழகம் வரும் தமிழ் அகதிகள் எவ்வாறு கையாள்வது என்பதில் குழப்பம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடி மற்றும் கடும் விலை உயர்வு காரணமாக இலங்கை தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு தப்பித்து வரத் தொடங்கியுள்ளனர். ஆனால், அவர்களை சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்களாக கருதுவதா அல்லது அகதியாக பதிவு செய்வதா என்ற குழப்பத்தில் இந்திய அரசும் தமிழக அரசும் உள்ளன.

இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள இலங்கை தமிழர்களை எத்தகையவர்களாக கருதலாம் என்பது குறித்து இந்திய வெளியுறவுத்துறையிடம் தமிழ்நாடு அரசு விளக்கம் தருமாறு கோரியுள்ளது. இது குறித்து தமிழக அரசின் அயலக தமிழர் நலம் மற்றும் மறுவாழ்வு துறை கமிஷனர் ஜெசிந்தா லாசரஸ் பிபிசி தமிழிடம் பேசுகையில், "இந்தியா வந்துள்ள இலங்கை தமிழர்களில் பெண்கள், குழந்தைகள் உள்ளனர். அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்து மாறு அதிகாரிகளை கேட்டுள்ளோம். மத்திய அரசிடம் தற்போது வந்துள்ள இலங்கை தமிழர்களை எப்படி கருதலாம் என கேட்டுள்ளோம். அதன் முடிவு வரும்வரை முகாம்களில் அவர்களை வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என்று கூறினார்.

இந்திய வெளியுறவுத்துறையை இது தொடர்பாக தொடர்பு கொண்டு பேசியபோது, உயர் மட்ட அளவில் இது குறித்து விவாதித்து வருகிறோம். விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் ஒரே நாளில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி பகுதி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கையில் உள்ள அந்நாட்டு தமிழர்கள் அங்கு இறுதிகட்ட உள்நாட்டுப்போரின் போது அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழலில், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுபாட்டால் இலங்கை தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வரக்கூடும் என தகவல் வெளியானது. எனவே சர்வதேச கடல் எல்லை மற்றும் கடலோர பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என கடலோர பாதுகாப்பு குழுமத்துக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கள் கிழமை இரவு மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையில் இருந்து மன்னாரை சேர்ந்த ஆறு பேர் ஒரு பைபர் படகில் புறப்பட்டு செவ்வாய்க்கிழமை அதிகாலை சுமார் 3 மணி அளவில் தனுஷ்கோடியை அடுத்துள்ள நான்காம் மணல் திட்டு பகுதியில் வந்து இறங்கினர்.

மணல் திட்டில் அதிகாலை முதல் குடிநீர் மற்றும் உணவின்றி கைக்குழந்தையுடன் இலங்கை தமிழர்கள் தவித்து வருவதாக அப்பகுதியில் மீன் பிடித்து



**தமிழ்நாட்டுக்கு வந்துள்ள இலங்கை தமிழர்களை எத்தகையவர்களாக கருதலாம் என்பது குறித்து இந்திய வெளியுறவுத்துறையிடம் தமிழ்நாடு அரசு விளக்கம் தருமாறு கோரியுள்ளது. முடிவு வரும்வரை முகாம்களில் அவர்களை வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**பிரபுராவ் ஆனந்தன்**

கொண்டிருந்த மீனவர்கள் மண்டபம் கடலோர காவல் படை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர்.

அதன் அடிப்படையில் மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான "ஹோவர் கிராப்ட்" படகு மூலம் மணல் திட்டில் இருந்த இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் கடலோர காவல் படை முகாமிற்கு அழைத்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்கரையில் இருந்து தனது சொந்த பைபர் படகில் வவுனியாவை சேர்ந்த ஐந்து குழந்தைகள், மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடிக்கு புறப்பட்டனர்.

நடுக்கடலில் படகின் எஞ்சினில் ஏற்பட்ட பழுது காரணமாக அதில் இருந்தவர்கள் கடும் வெப்பத்துக்கு மத்தியில் உணவு, தண்ணீரின்றி சுமார் 37 மணி நேரத்திற்கும் மேலாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தவித்தனர். பல மணி நேர முயற்சிக்குப் பின் எஞ்சின் சரி செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் தனுஷ்கோடி வடக்கு பாலம் மீன்பிடி துறைமுகத்திற்கு அவர்கள் வந்தடைந்தனர்.

இலங்கை தமிழர்கள் தமிழகம் வருவதற்கான காரணம் குறித்து தனுஷ்கோடி வந்துள்ள மன்னாரை சேர்ந்த கியூரி பேசுகையில், "இலங்கையில் தற்போது நிலவி வரும் கடுமையான விலைவாசி உயர்வு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக தனுஷ்கோடி வர முயற்சி செய்து திங்கள்கிழமை இரவு அங்கிருந்து கிளம்பினோம். மன்னார் மாவட்டத்திலிருந்து பைபர் படகில் எங்களை அழைத்து வந்து இங்கு விட்டவர்களின் முழுமையான தகவல் எதுவும் எங்களுக்கு தெரியாது. ஆனால் தமிழகம் அழைத்து வர தலா நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் என ஆறு நபர்களுக்கு 60 ஆயிரம் கொடுத்தோம்" என்றார்.

"இறுதிகட்ட போரின் போது உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு 2001ஆம் ஆண்டு அகதியாக வந்து குடியாத்தம் அகதிகள் முகாமில் தங்கி இருந்தேன். முகாமில் தங்கியிருந்த இலங்கை அகதியை திருமணம் செய்தேன். பின் இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததால் விமானம் மூலம் தாயகத்துக்குத் திரும்பி வாழ்ந்து வந்தோம்," என்று அவர் கூறினார்.

"எனக்கும் என் கணவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 9 மாதங்களாக நான் அவரிடம் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன். தற்போது இலங்கையில் உள்ள சூழ்நிலையில் எனது இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு என்னால் தனியாக வாழ இயலாது. எனவே தமிழ்நாட்டில் அகதிகள் முகாமில் தங்கியுள்ள உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக மீண்டும் படகு மூலம் அகதியாக தனுஷ்கோடி வந்தேன்" என்று கூறினார் கியூரி.

இலங்கையில் இருந்து வரக்கூடிய நபர்கள் உரிய ஆவணங்களுடன் விமானம் மூலம் வந்தால் மட்டுமே தமிழகத்திற்குள் அனுமதிக்க முடியும். உரிய ஆவணங்கள் இன்றி வரும் நபர்கள் மீது நிச்சயம் வழக்கு பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள். அதன் அடிப்படையில் தான் தற்போது தனுஷ்கோடி வந்துள்ள இலங்கை தமிழர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இருந்து குழந்தைகளுடன் தமிழகம் வரும் இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் தங்க அனுமதி கோரினால் அதை ஏற்க முடியாது. அவர்கள் எந்த நோக்கத்தோடு தமிழகத்திற்குள் வருகிறார்கள், அவர்கள் யார் என்ற பல்வேறு கோணங்களில் சந்தேகம் உள்ளதால் சட்ட ரீதியான நடவடிக்கை மட்டுமே எடுக்கப்பட்டு வருவதாக மெரைன் காவல் கண்காணிப்பாளர் குணசேகரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்கிழமை ஒரே நாளில் 16 இலங்கை தமிழர்கள் இரு நாட்டு பாதுகாப்பையும் மீறி கடல் வழியாக படகில் தமிழகத்திற்குள் நுழைந்தது கடல் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் நிலவி வரும் கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இன்னும் பலர் தமிழகம் வர தயாராக இருப்பதாக இலங்கையில் இருந்து வந்துள்ள இலங்கை தமிழர்களிடம் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்திய கடற்பரப்பில் கடற்படை, கடலோர காவல் படை அதிகாரிகள் பாதுகாப்பை தீவிரப்படுத்த முடிவு செய்ததுடன், கடற்கரை ஓரங்களில் தமிழக கடலோர காவல் குழும போலீசார், மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக இந்திய கடலோர காவல் படை அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

**- பி.பி.சி.**

ஈழநாடு



# மரியுபோல் மீது தொடர் தாக்குதல் ரஷ்யா இலக்கு வைப்பது எதற்காக?

**2016ஆம் ஆண்டு போர் நடைபெற்ற நகரங்களில் இருந்து வெளியேறிய மக்களுக்கு உதவிக் கரம் நீட்டியமைக்காக ஐ.நா. சபையில் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் “ஒற்றுமையின் நகரம்” என்ற மதிப்பைப் பெற்றது மரியுபோல்.**




**சோனால் குப்தா**

ஆயுதங்களை விட்டுவிட்டு சரணடையுமாறு ரஷ்யா கூறியதை உக்ரைன் ஏற்றுக் கொள்ளாத நிலையில் உக்ரேனிய நகரமான மரியுபோல் மீது தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது ரஷ்ய ராணுவம். தொடர்ந்து குண்டுகளை வீசி நகரத்தை அழித்து சாம்பல் நிலமாக மாற்றிவிட் டனர் ரஷ்ய படையினர் என்று அந்த நகர கவுன்சில் அறிவித்துள்ளது.

2014ம் ஆண்டு ரஷ்ய - ஆதரவு பிரிவினைவாதிகளால் டோ னெஸ்ட்க் நகரத்தை கைப்பற்ற முடியவில்லை, அதனை கருத்தில் கொண்டு இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி மரியுபோலில் போர் புரிந்து வருகிறது ரஷ்யா. இந்த கட்டுரையில், ரஷ்யாவுக்கு மரியுபோலை கைப்பற்ற ஏன் ஆர்வம் காட்டுகிறது என்று பார்ப்போம்.

### ரஷ்யாவுக்கு ஏன் மரியுபோல் முக்கியமானது?

புவியியல் அடிப்படையில் மரியுபோல் 2014ம் ஆண்டு ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட க்ரிமியாவுக்கும், பிரிவினைவாதிகளை அதிகமாக கொண்ட டோன்பாஸூக்கும் இடையே ஒரு பாலமாக அமைகிறது. தற்போது இவ்விரண்டு பிரதேசங்களுக்கும் நடுவே அஸோவ் கடற்பரப்பு அமைந்துள்ளாது.

ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் இருக்கும் டோன்பாஸூக்கு வெறும் 100 கி.மீ தொலைவில் இருக்கும் இந்த பிரதேசத்தை கைப்பற்ற 2014ஆம் ஆண்டு தீவிர முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர். ஆனாலும் உக்ரைன் ராணுவம் அந்த பிராந்தியத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டது. அப்போதைய உக்ரைன் அதிபர் பெட்ரோ பொரோஷென்கோ, டோனெட்ஸ்க் ரஷ்யர்களின் கையில் சிக்கியதால் அப்லாஸ்ட்டின் பிராந்திய தலைநகராக மரியுபோலை அறிவித்தார்.

2016ஆம் ஆண்டு போர் நடைபெற்ற நகரங்களில் இருந்து வெளியேறிய மக்களுக்கு உதவிக் கரம் நீட்டியமைக்காக ஐ.நா. சபையில் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் “ஒற்றுமையின் நகரம்” என்ற மதிப்பைப் பெற்றது மரியுபோல்.

### கடல்சார் நன்மைகள், பொருளாதார நலன்கள்

மரியுபோலை கைப்பற்றுவது நிலம் சார் நன்மைகள் மட்டுமின்றி ரஷ்யாவுக்கு கடல்சார் நன்மைகளையும் வழங்கும். கெர்சோன் வீழ்ச்சிக்கு பிறகு ரஷ்யா கருங்கடல் பகுதியில் தன்னுடைய கட்டுப்பாட்டை விரிவுப்படுத்தி வருகிறது. க்ரீமியா கைப்பற்றப்பட்ட பிறகு பெரும்பாலான பகுதிகளில் மாஸ்கோவின் அதிகாரம் அதிகமாகியுள்ளது.

ரஷ்ய படையினர் கருங்கடலை ஒட்டியுள்ள மைக்லாயிவ் மற்றும் ஒடேஸா நகரங்களிலும் தாக்குதல்களை துவங்கியுள்ளனர்.

கிழக்கில், அஸோவ் கடலை ஒட்டியுள்ள, மரியுபோல் பகுதியை தவிர அனைத்து பிராந்தியங்களும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. உக்ரைனின் மிகப்பெரிய துறைமுகம் மரியுபோலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. மெலிதோபோல் மற்றும் பெர்டியன்ஸ்க் போன்ற நகரங்கள், போர் துவங்கிய சில நாட்களிலேயே ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது என்று தி கார்டின் செய்தி வெளியிட்டது.

மரியுபோல் வீழ்த்தப்படும் பட்சத்தில் அஸாவ் கடலை ஒட்டியுள்ள அனைத்து பிராந்தியங்களும், கருங்கடலை ஒட்டியுள்ள பெரும்பாலான பிராந்தியங்களும் ரஷ்யாவின் கைக்கு வர, உக்ரைனின் கடல்வழி வர்த்தகம் முடிவுக்கு வந்துவிடும் என்று கூறப்படுகிறது. 2014இல் உக்ரைன் கருங்கடல் கடற்கரையில் மூன்றில் ஒரு பகுதியையும், கெர்ச் ஜல சந்தி மற்றும் அதன் ஐந்து துறைமுகங்களையும் இழந்தது.

கிரிமியா இணைக்கப்பட்ட பிறகு மரியுபோல் மற்றும் பெர்டியன்ஸ்க் பகுதிகளில் சரக்குகளை கையாளும் விகிதம் 70% முதல் 50% ஆக குறைந்துவிட்டது என்று தி ஃபினான்சியல் டைம்ஸ் செய்தி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக துறைமுகங்களுக்கு கூ400 மில்லியன் இழப்பு ஏற்பட்டது. 2018ம் ஆண்டில் கெர்ச் ஜலசந்தியில் ரஷ்யா பாலத்தை திறக்க நிலைமை இன்னும் மோசமானது. இந்தப் பாலம் அதிகபட்சமாக 35-மீட்டர் உயரம் கொண்ட சிறிய கப்பல்களுக்கு மட்டுமே வழியை தரும். மேலும் ரஷ்ய அதிகாரிகளின் ஆய்வுகள் அதிகரித்து வருவதால், உக்ரேனிய கப்பல்கள் செல்ல கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் காத்திருக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

உக்ரைனின் மொத்த இரும்பு ஏற்றுமதியில் ஐந்தில் ஒரு மடங்கு மரியுபோலை நம்பியுள்ளது. பெர்டியன்ஸ்க் நகருடன் சேர்க்கும் போது மொத்த தானிய ஏற்றுமதியில் 5% இங்கு நடைபெறுகிறது ப்ளூாம்பெர்க் கூறியுள்ளது.

ஐரோப்பாவில் உள்ள இரண்டு பெரிய இரும்பு மற்றும் எஃகு ஆலைகளான அசோவ்ஸ்டல் மற்றும் இலிச் இங்கே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய ஏவுகணை தாக்குதலால் அசோவ்ஸ்டல் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எனவே, மரியுபோல் மீதான மாஸ்கோவின் கட்டுப்பாடு உக்ரைனின் கடல் வர்த்தகம் மற்றும் உலோக உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

### நோவோரோஷியா

2014ம் ஆண்டு ரஷ்ய அதிபர் புடின் நோவோரோஷியா (புது ரஷ்யா) என்ற பதம் ஒன்றை, செய்தியாளர்கள் சந்திப்பின் போது பயன்படுத்தினார். ஷரிஸ்ட் (Tsarist) ஆட்சியின் கீழ் செயல்பட்டு வந்த ரஷ்யாவின் சில பகுதிகளை வரலாற்றில் நோவோரோஷியா என்று குறிப்பிடுகின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

அந்த பகுதியில் கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைன் பகுதிகளான ஒடேஸ்ஸா, கார்கிவ், கெர்சோன், டோனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் போன்ற பகுதிகள் அடங்கும்.

“ரஷ்யாவின் ஒரு பகுதியாக உள்ள பிராந்தியத்தின் வரலாறு மாஸ்கோவின் இன்றைய குடிமக்களைப் பாதுகாக்கும் கடமையை உருவாக்கியுள்ளது” என்று புடின் கூறியதாக ராய்ட்டர்ஸ் அறிவித்தது. மரியுபோலைக் கட்டுப்படுத்துவது புடினை கற்பனையான நோவோரோஷியாவை உருவாக்க வழி வகுக்கும்.

### மிகவும் தேவைப்படும் ஒரு வெற்றி

கடைசியாக, வடக்கு உக்ரைன் முழுவதும் நடைபெற்று வரும் போரானது பெரும்பாலும் நிலையானது என்று பிரிட்டிஷ் இராணுவ உளவுத்துறை அறிவித்துள்ளது.

மேலும், மரியுபோல் வெற்றி ரஷ்யப் படைகளுக்கு ஒரு பெரிய மன உறுதியை அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளது.

ரஷ்யப் படைகள் வடக்கில் கார்கிவ் மற்றும் தெற்கில் மரியுபோல் திசையில் இருந்து முன்னேறும்போது நாட்டின் கிழக்கில் உக்ரேனியப் படைகளை சுற்றி வளைக்க முயற்சிக்கின்றன என்று இங்கிலாந்து பாதுகாப்புத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ரஷ்யாவின் படையெடுப்பை ஒரு ‘தோல்வி’ என்று கூறியதை தொடர்ந்து வெளியாகியுள்ளது இந்த அறிக்கை. ரஷ்யா உக்ரைனுக்கு எதிராக அதன் தூண்டுதலற்ற தாக்குதலை நடத்துவதில் மூன்று அடிப்படை நோக்கங்களை நிறைவேற்ற எண்ணியது: முதலில், உக்ரைனை அடிபணியச் செய்வது இரண்டாவதாக, ரஷ்ய சக்தி மற்றும் கௌரவத்தை அதிகரிப்பது. மூன்றாவது, மேற்குலகைப் பிரித்து பலவீனப்படுத்துவது. ரஷ்யா இதுவரை வெளிப்படையாக மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றத் தவறிவிட்டது. உண்மையில், எதிர்மாறாக சாதித்துள்ளது என்று சல்லிவன் கூறினார்.

2014 இல் ரஷ்ய துருப்புக்களை விரட்டியடித்த அஸோவ் படைப்பிரிவின் தலைமையகமாகும் மரியுபோல். இருப்பினும் அஸோவ் போராளிகள் நவ-நாஜி மற்றும் தீவிர வலதுசாரிக் கருத்துக்களைக் கொண்டதாக அறியப்பட்டவர்கள்.

2014 இல் தேசிய காவலில் இக்குழு இணைக்கப்பட்டது, அஸோவ் பிரிவினர் ஒரு நேஷனல் கார்ப்ஸ் என்ற ஒரு அரசியல் கட்சியைக் கொண்டுள்ள னர். தீவிரவாத வன்முறை குற்றம் சாட்டப்பட்ட நேஷனல் மிலிஷியா என்ற ஒரு துணை ராணுவக் குழுவையும் இது கொண்டுள்ளது.

இத்தகைய நவ-நாஜி குழுக்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகளை உக்ரைனில் மேற்கொள்ள வேண்டும் என்று புடின் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது மரியுபோலில் ரஷ்யா வெற்றி பெற்றால், அது அவரின் கூற்றை நிரூபிக்க போதுமானதாக இருக்கும். ஆனாலும் கூட உக்ரைன் பாதுகாப்பு படையில் அஸோவ் பிரிவினரின் பங்களிப்பு மிகவும் குறைவானது தான். சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான ஸ்டான்போர்டின் மையம் 2019ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையின் படி, அஸோவ் படைப்பிரிவு 1,500 உறுப்பினர்களையும், 1,000 உறுப்பினர்களையும் தேசிய இராணுவத்திலும் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டது. ■


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


❖ **கீழே தரப்பட்டுள்ள 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவின் மிகப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

01.



1) 2) 3)


02.



1) 2) 3)


❖ **தரப்பட்டுள்ள இரண்டு உருக்களினை நன்கு அவதானித்து உரு A க்கும் உரு B க்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?**

03.




1) 2  2) 4  3) 3

04. கீழே தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் உள்ளடங்கக் கூடிய உருவைத் தெரிவு செய்க.



1) 2) 3)

05. தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்க.
அம்புலி , நிலா , சந்திரன் , இந்திரன் , மதி

1) அம்புலி  2) சந்திரன்  3) இந்திரன்

06. இங்கு தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இரண்டு சொற்கள் ஒரு கூட்டமாகவும், மூன்று சொற்கள் ஒரு கூட்டமாகவும் அமைக்கும்போது ஒரு சொல் வேறுபட்டு இருக்கும். அச் சொல்லைத் தெரிவு செய்க.

திங்கள் , பங்குனி , வைகாசி , சனி , செவ்வாய் , யுரேனஸ்


1) திங்கள்  2) பங்குனி  3) சனி

07. | A | C | E | → | B | D | F | எனின்

| i | iii | v | → | | | | இடைவெளிக்குப் பொருத்தமானது.


1) | ii | iv | v |  2) | ii | iv | vii |  3) | ii | iv | vi |

08. 799, 777, 37491 எண்களை இடமிருந்து வலமாகவும், 387, 479 ஆகிய எண்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் 5 ஆவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?



1) 97  2) 17  3) 79

09. பின்வரும் கணிதச் செய்கையினை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1) 25  2) 5  3) 6


10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?
சுயமான ஒளி இல்லை
புவியதை வலம் வருவான்
மாதத்தில் ஒருமுறை மாயமாவான்
தண்மையான ஒளிதனை தரணிக்களிப்பான்.

1) நட்சத்திரம்  2) திங்கள்  3) பூமி


11.





என்னும் தரவுகளைக் கொண்டு பிரசினத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




12.



இங்கு ஊடுருவு தாளில் இரண்டு படங்கள் வரையப் பட்டுள்ளன. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட பின்னர் தெரியும் உருவைத் தெரிவு செய்க.




## விடைகள்

| | | |
|---|---|---|
| 1. 2 | 5. 3 | 9. 1 |
| 2. 1 | 6. 1 | 10. 2 |
| 3. 2 | 7. 3 | 11. 1 |
| 4. 2 | 8. 2 | 12. 3 |

**கல்வி tv CHANNEL-1**

**25.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**25.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பாதுகாப்பு என்ற போர்வையில் மீண்டும் இராணுவ மயமாக்கப்படுகின்றது நாடு!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

திருமலை, மார்ச் 25

**இலங்கை பாதுகாப்பு என்ற போர்வையில் மீண்டும் ராணுவ மயமாக்கப்படுகிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் கலாநிதி ஸ்ரீ ஞானேஸ்வரன் தெரிவித்தார்.**

திருகோணமலையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு சென்று கொண்டிருக்கும் இந்த நிலையில் இலங்கையின் மனித உரிமையும் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் கட்டாயப்படுத்தப்பட்டு இராணுவ மயமாக்கல் நடைபெற்று வருகிறது.

இலங்கையை தற்போதைய பொருளாதார நிலையில் இருந்து காப்பாற்ற நினைக்கும் நாடுகள் இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களை கருத்தில் கொள்ளவில்லை.

அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழர் மீதான அரச பயங்கரவாதச் செயற்பாடுகளை ஏன் வெளிநாடுகள் பாராமுகமாக இருக்கின்றன? அதனை விடுத்து இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து அவதானத்துடன் செயற்படவேண்டும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைமை காரணமாக சொல்லொணாத் துயரத்தை பொதுமக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் தமது கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத அளவுக்கு ராணுவத்தின் மூலமாக ஒடுக்குமுறையை கொள்ள இந்த அரசு முயற்சிக்கிறது-என்றார். (அ)



### விறகு வெட்ட சென்றவர் நேற்று சடலமாக மீட்பு!

திருமலை, மார்ச் 25

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் பிரதேசத்தில் விறகு வெட்டுவதற்காகச் சென்ற நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் இருந்து நேற்று முன் தினம் விறகு வெட்டுவதற்காகத் திருகோணமலை முத்துநகர் பிரதேசத்துக்குச் சென்ற நபர் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார் எப பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கிழக்கின் முதல் புற்தரை கிரிக்கெட் அரங்கு ஏப்ரல் 03ஆம் திகதி மட்டக்களப்பில் திறப்பு

மட்டக்களப்பு, மார்ச் 25


கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக, அந்த மாகாணத்தின் முதல் புற்தரை கிரிக்கெட் அரங்கு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மைதானம், புலம்பெயர்ந்து வாழும் கோட்டைமுனை விளையாட்டுக் கழக அங்கத்தவர்களின் நிதி உதவியோடு, மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சத்துருக்கொண்டானில், கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மைதானம் முன்னரே கட்டி முடிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதும் கோவிட்-19 வைரஸ் தொற்று உட்பட நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பிற்போடப்பட்டது.

தற்போது பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மைதானத்தில் 30 கிரிக்கெட் வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கி பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு, மைதானத்தின் நடுவே ஐந்து புற்தரை களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் வீரர்களின் பயிற்சிக்காக இங்கு ஆறு வலைப்பயிற்சி மையங்களும் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதிநவீன இலத்திரனியல் ஸ்கோர் பலகை, நகர்த்தக்கூடிய கறுப்பு வெள்ளை பார்வைத்திரை என்பனவும் காணப்படுகின்றன. (அ)



# இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்தை மாற்றவேண்டாம்

## நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை

சாய்ந்தமருது, மார்ச் 25

சாய்ந்தமருது பிரதேசத்தில் இயங்கி வரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தை, அம்பாறைக்கு இடமாற்றவேண்டாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு, அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், சாய்ந்தமருதில் இயங்கி வரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் இயங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம், சாய்ந்தமருதிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் 2011ஆம் ஆண்டு முதல் இயங்கின்றது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை அம்பாறை நகரத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்தி, குறித்த அலுவலகம் அவ்விடத்திலையே தொடர்ந்தும் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)



# காட்டு யானை அட்டகாசம்!

அம்பாறை, மார்ச் 25

பொத்துவில் தாமரைக்குள கிராமத்தில் உட்புகுந்த காட்டு யானை அங்கிருந்த வீடு ஒன்றை முற்றாக சேதமாக்கியுள்ளது.

அண்மைக் காலமாக பொத்துவில் பிரதேசத்துக்குட்பட்ட சர்வோதயபுரம் மற்றும் செங்காமம் ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் பீதியுடன் காணப்படுகின்றனர். இதனால் மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி, தமது குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

யானைத் தொல்லையை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். இது தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (அ)

# தமிழர் பண்டைய முறையில் மட்டக்களப்பில் திருமணம்!





மட்டக்களப்பு, மார்ச் 25

தமிழர்களின் பண்டைய முறையிலான திருமணம் ஒன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியிலேயே இந்த திருமணம் நடைபெற்றது.

நெற் கற்றைகளினால் சோடனை செய்யப்பட்ட மாட்டு வண்டியில் மணமகனும் மணமகளும் ஆலயத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு திருமணம் செய்துவைக்கப்பட்டது.

அத்துடன் வீடும் நெற்கற்றைகளினால் சோடனை செய்யப்பட்டிருந்ததுடன் நிகழ்வுகள் பாரம்பரியங்களை பேணியதாக நடைபெற்றன.

தற்போதைய காலத்தில் தமிழர்களின் பண்டைய பாரம்பரியங்கள் மறக்கப்பட்டுவரும் நிலையில் மீண்டும் அவற்றை எதிர்காலச் சந்ததிக்கு கொண்டு செல்லும் வகையில் இந்த திருமணத்தை நடத்தியதாக உறவினர்கள் தெரிவித்தனர். (அ)



# லண்டன் சிறையில் காதலியை கரம் பிடித்தார் ஜூலியன் அசேஞ்!

லண்டன், மார்ச் 25

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசேஞ் தனது நீண்ட கால காதலியான ஸ்டெல்லா மோரிஸை தென்கிழக்கு லண்டனில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் திருமணம் செய்துகொண்டார்.

2019ஆம் ஆண்டு முதல் தென்கிழக்கு லண்டனில் உள்ள உயர் பாதுகாப்பு பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 50 வயதான ஜூலியன் அசேஞ், நேற்று முன்தினம் புதன் கிழமை சிறைச்சாலையில் கைதிகளை பார்வையாளர்கள் பார்வையிடும் நேரத்தில் திருமண பந்தத்தில் இணைந்தார்.

சிறைச்சாலையில் நடந்த திருமணத்தில் 4 விருந்தினர்கள் மற்றும் இரண்டு சாட்சிகள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதாக அசேஞ்சின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், திருமணத்திற்கு பின் ஸ்டெல்லா மோரிஸ் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து கேக் வெட்டி கொண்டாடும் காணொளி ஒன்றை விக்கிலீக்ஸ் நிறுவனம் தனது ருவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

ஜூலியன் அசேஞ், 2019 ஆம் ஆண்டு அடைக்கப்படுவதற்கு முன்னர், லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் ஏழு ஆண்டுகளாக தங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2011ஆம் ஆண்டு லண்டன் தூதரகத்தில் இருந்தபோது அவருக்கும் 37 வயதான ஸ்டெல்லா மோரிஸ்க்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

மோரிஸ், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஜூலியன் அசேஞ்யின் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். 2015 ஆம் ஆண்டு முதல் இவர்கள் காதலித்து வந்தனர். இவர்களுக்கு தற்போது இரண்டு குழந்தைகள் உள்ளனர். (அ)

# ரஷ்யாவுக்கு எதிராக வீதிகளில் உலக மக்கள் போராடவேண்டும்

## உக்ரைன் ஜனாதிபதி அழைப்பு

கீவ், மார்ச் 25

உலக மக்கள் அனைவரும் ரஷ்யாவுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராடவேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உத்தரவை தொடர்ந்து உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றன. கடந்த ஒரு மாதமாக தொடரும் இந்த போரில் இராணுவத்தினர், மக்கள் என ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்.

உக்ரைனின் பல்வேறு முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ள ரஷ்யப் படைகள் தலைநகர் கீவை நோக்கி முன்னேறி வருகின்றனர்.



போர் தொடங்கி ஒரு மாதத்தை எட்டியுள்ள நிலையில், ரஷ்யாவால் நடத்தப்படும் போர் உக்ரைனுக்கு எதிரானது மட்டுமல்ல, சுதந்திரத்துக்கு எதிரானது எனத் தெரிவிக்கும் உக்ரைன் ஜனாதிபதியின் காணொளியை வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

உக்ரைன் அதிபர் காணொளியில் பேசியதாவது:

உக்ரைன் நாட்டையும், சுதந்திரத்தையும் ஆதரிக்க அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், வீடுகளிலிருந்து அனைத்து மக்களும் இன்று தெருக்களுக்கு வாருங்கள்.

போரை நிறுத்த வலியுறுத்தும் அனைத்து உலக மக்களும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

இதற்கிடையே ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளன. (அ)

# சனிக்கிழமை முதல் 2,000 நிலநடுக்கங்கள்! அதிரும் போர்த்துக்கல் சாவோ ஜோர்ஜ் தீவு!

லிஸ்பன், மார்ச் 25

சமீபத்திய நாட்களில் ஆயி ரக்கணக்கான சிறிய நிலநடுக்கங்களால் பாதிக்கப்பட்ட மத்திய அட்லாண்டிக் போர்த்துக்கேய எரிமலைத் தீவில் நிலைமை மோசமடைந்துள்ளதால் அங்கிருந்து மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றுவதற்கான திட்டங்களை அதிகாரிகள் வகுத்து வருகின்றனர்.


அசோர்ஸ் தீவு கூட்டத்தில் உள்ள சாவோ ஜோர்ஜில் கடந்த சனிக்கிழமை முதல் சுமார் 2,000 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக வெலாஸ் நகராட்சியின் மேயர் லூயிஸ் சில்வீரா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிராந்தியத்தின் சிவிசா நில அதிர்வு - எரிமலை கண் காணிப்பு மையத்தின்படி தக வல்களின்படி இந்தப் பகுதி களில் 1.6 முதல் 3.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கங்கள் பதி வாகியுள்ளன. தொடர்ந்து இந்தப் பகுதியில் சக்திவாய்ந்த நடுக்கம் அல்லது எரிமலை வெடிப்பு ஏற்படலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.

இந்தப் பகுதியில் எரிமலை வெடிப்புக்கான சாத்தியம் உள்ளது என சிவில் பாதுகாப்பு அதிகார சபைக்கு பொறுப்பான பிராந்திய செயலாளர் கிளி லியோ மெனிசஸ் கூறினார். மோசமான நிலை ஒன்றை எதிர் கொள்ள நாங்கள் தயாராகி வருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தீவின் மனாடாஸ் என்ற எரிமலைப் பிளவில் சிறிய நில நடுக்கங்கள் பதிவாகியுள் ளன. எனினும் எந்தச் சேதங்களும் இதுவரை ஏற்படவில்லை. மனாடாஸ் எரிமலைப் கடை சியாக 1808 ஆம் ஆண்டு வெடித்தது. 1980 இல் ஒரு பெரிய பூகம்பம் தீவைத் தாக்கி கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது.

தற்போது முன்னெச்சரிக்கையாக அசோர்ஸ்




தீவுக் கூட்டத் தில் உள்ள மருத்துவமனைகள், பராமரிப்பு இல்லங்களில் உள்ளவர்கள் தீவின் மறுபுறத் தில் உள்ள கல்ஹெட்டாவுக்கு மாற்றப்படுவதாக வெலாஸ் நகராட்சியின் மேயர் லூயிஸ் சில்வீரா கூறினார்.

அத்துடன், பாதிக்கப்படக் கூடிய தரப்பினரை இனங் கண்டு அவர்களையும் வேறு பகுதிகளுக்கு நகர்த்த தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மீதமுள்ள மக்களை கல் ஹெட்டாவுக்கு அல்லது பிற தீவுகளுக்கு வெளியேற்றும் திட்டங்கள் தேவைப்பட்டால் மட்டுமே செயல்படுத்தப்படும் என்றும் நகராட்சி மேயர் குறிப்பிட்டார்.

அசோர்ஸில் உள்ள ஒன்பது தீவுகளில் ஒன்றான சாவோ ஜோர்ஜ் தீவில் சுமார் 8,400 மக்கள் வசிக்கின்றனர். இங்கு இதில் பிரபலமான சுற்றுலா தலங்களான பையல் மற்றும் பிகோ ஆகிய மலைகள் உள்ளன.

இந்நிலையிலேயே இந்தப் பகுதியில் இருந்து மக்களை வெளியேற்ற அதிகாரிகள் தயாராகி வருகின்றனர். அத்துடன், ஆபத்தை எதிர்கொள்ள இராணுவமும் விமானப்படையும் உதவ தயாராக உள்ளன. (அ)

# தடை செய்யப்பட்ட ஏவுகணையை நேற்று பரிசோதித்தது வடகொரியா!




பியொங்யாங், மார்ச்

வடகொரியா தடை செய்யப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை கடந்த 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக சோதித்துள்ளதாக தென் கொரியா மற்றும் ஜப்பான் தெரிவித்துள்ளன.

ஜப்பானிய அதிகாரிகள் குறித்த ஏவுகணை 1,100 கி.மீ (684 மைல்கள்) பறந்ததாக மதிப்பிட்டுள்ளனர். இது ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பறந்து ஜப்பானிய கடல் பகுதியில் விழுந்துள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையால், நிலையான பாதையில் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் பயணிக்க முடியும். மேலும், கோட்பாட்டளவில் அமெரிக்காவை அடைய முடியும்.

வடகொரியா கடந்த சில வாரங்களாக ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. வடகொரியா, செயற்கைக் கோள் ஏவுதல் என்று கூறிய சில சோதனைகள் உண்மையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை அமைப்பின் சில பகுதிகளின் சோதனைகள் என்று அமெரிக்காவும் தென் கொரியாவும் கூறியுள்ளன.

நேற்று வியாழக்கிழமை ஏவப்பட்ட ஏவுகணை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஏவப்பட்டதைவிட புதியதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் தோன்றியதாக ஜப்பானிய அதிகாரிகள் கூறுகின்றனர். இது 6,000 கி.மீ உயரத்தை எட்டியது.

2017ஆக்குப் பிறகு முதல் முறையாக முழு வீச்சில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை நடத்த வட கொரியா தயாராகலாம் என்று அண்மைய வாரங்களில் அமெரிக்காவும் தென் கொரியாவும் எச்சரித்திருந்த நிலையில் இந்த செய்தி வெளிவந்துள்ளது.

கடந்த மார்ச் 16ஆம் திகதி வட கொரியா ஒரு சந்தேகத்திற்கிடமான ஏவுகணையை ஏவியதாகவும் அது மேலே ஏவப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்து சிதறியதாகவும் தென் கொரியாவின் இராணுவம் தெரிவித்துள்ளது. (அ)

# சீன விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் மனித எச்சங்கள் மீட்பு

பீஜிங், மார்ச் 25

சீனா ஈஸ்டர்ன் ஜெட் விபத்துக்குள்ளான இடத்தில் மீட்புக் குழுக்கள் மனித எச்சங்களை கண்டுபிடித்துள்ளதாக மாநில ஊடகங்கள் கூறுகின்றன.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அதிகாரிகள் இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் விமானத்தில் இருந்த 132 பேரில் எவரும் உயிர் பிழைத்ததற்கான எந்த அறிகுறியும் இதுவரை இல்லை.

கடந்த திங்கட்கிழமை தெற்கு சீனாவில் விபத்துக் குள்ளான விமானத்திற்கான காரணம் இதுவரை தெரியாத நிலையில், அதிகாரிகள் விசாரணைகளை முடுக்கிவிட் டுள்ளனர்.

ஆனால் கறுப்புப் பெட்டியை மீட்டெடுப்பது விபத்துக்கான காரணத்தை வெளிப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

கடினமான சூழ்நிலையில் முக்கியமான கறுப்புப் பெட்டிகளில் முதல் ஒன்றை நேற்று முன் தினம் புதன்கிழமை தேடுதல் குழுக்கள் கண்டுபிடித்தன.

ஆனால், கறுப்புப் பெட்டி வெளிப்புறத்தில் சேதமடைந்து காணப்பட்டது. எனினும், அதன் உள் பதிவுகள் நன்றாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதன் தரவுகளை ஆய்வு செய்வதற்காக இது பீஜிங்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

கனமழையால் வுஜோவில் விபத்து நடந்த இடத்தின் செங்குத்தான மற்றும் கரடுமுரடான நிலப்பரப்பில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இது நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான முயற்சிகளை கடினமாக்குகிறது.

விமானத்தில் இருந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு வரத் தொடங்கினர். அவர்கள் அங்கு கண்ணீருடன் காணப்பட்டனர் ஜனாதிபதி ஸி ஜின்பிங் இந்த சம்பவம் குறித்து முழு விசாரணைக்கு உத்தரவிட்டார். (அ)

# ஐ. பி. எல். தொடர் நாளை கோலாகலமாக ஆரம்பம்!

## சென்னை - கொல்கத்தால் முதல் போட்டியில் மோதல்




மும்பை, மார்ச் 25

ஐ. பி. எல். 15ஆவது நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது. மும்பை வான்கடே மைதானத்தில் நடக்கும் முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு இந்தப் போட்டி தொடங்கும்.

இந்தத் தொடரில் 12 நாட்கள் இரு போட்டிகள் நடக்கும். முதல் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 7.30 மணிக்கும் தொடங்கும்.

இந்தத் தொடரில் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதனால், லீக் சுற்று இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதிக தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகிய இரு வெற்றி அணிகளும் தனித்தனிக் குழுக்களில் இடம்பெற்றுள்ளன. குழு ஏ இல் மும்பை, கொல்கத்தா, ராஜஸ்தான், டில்லி, லக்னோ அணிகள் இடம்பெற்றுள்ளன. குழு பி இல் ஹைதராபாத், பஞ்சாப், சென்னை, பெங்களூர், குஜராத் அணிகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் 14 லீக் போட்டிகளில் விளையாடும் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னதாக 70 போட்டிகள் நடக்கும். ஒவ்வொரு அணியும் ஒரே குழுவில் உள்ள அணிகளுடன் ஒரு தடவையும், மற்றைய குழுவில் உள்ள அணிகளுடன் இரு தடவைகளும் மோதும்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக மும்பை, புனே மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலேயே போட்டிகள் நடைபெறும். நாளை ஆரம்பமாகும் ஐ. பி. எல். தொடர் மே 22ஆம் திகதி வரை 58 நாட்கள் லீக் சுற்று போட்டிகள் நடக்கும். இறுதிப் போட்டி மே 29ஆம் திகதி நடக்கும்.

ஐ. பி. எல். தொடரில் வீரர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் குறைந்த பட்சம் 7 நாட்கள் அவர் தனிமைப்படுத்தப்படுவார். ஆறு அல்லது ஏழாவது நாளில் அவர் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படுவார். உயிர் குமிழி வலயத்துக்குள் அவர் மீண்டும் நுழைவதற்கு 24 மணி நேர இடைவெளியில் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான இரு எதிர்மறை பி. சி. ஆர். பரிசோதனைகளை வழங்க வேண்டும்.

போட்டியில் பலர் தொற்றால் பாதிக்கப்பட்டால் குறைந்த பட்சம் 7 இந்திய வீரர்கள் மற்றும் ஒரு வெளிநாட்டு வீரருடன் 12 வீரர்கள் இருந்தால் ஓர் அணியை களமிறக்க முடியும். 12 பேருக்குக் குறைவாக இருந்தால் ஐ. பி. எல். தொழில்நுட்ப குழு இறுதி முடிவு குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கும். முன்னதாக போட்டி திட்டமிடல் சாத்தியமில்லாதபோது ஓர் அணியை களமிறக்க முடியாத போது எதிரணிக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

ஐ. பி. எல். தொடரை நேரடியாகப் பார்வையிட மஹாராஷ்டிரா அரசாங்கம் 25வீத ரசிகர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. பார்வையாளர்கள் தடுப்பூசி பெற்றிருப்பது கட்டாயமானதாகும். (ஐ)



# சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவராகிறார் ஜடேஜா!

சென்னை, மார்ச் 25

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை பொறுப்பை ரவீந்திர ஜடேஜா ஏற்கவுள்ளார். ஐ. பி. எல். ஆரம்பித்த முதல் தொடரிலிருந்து மகேந்திர சிங் டோனி தலைவராக செயல்பட்டு வந்த நிலையில், தற்போது இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “மகேந்திர சிங் டோனி தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க முடிவெடுத்ததுடன், அவரே ரவீந்திர ஜடேஜாவை தலைமைப் பொறுப்புக்கு தேர்வு செய்துள்ளார். 2012 முதல் சென்னை அணியில் விளையாடி வரும் ஜடேஜா, சென்னை அணியை வழிநடத்தும் மூன்றாவது வீரராக இருப்பார். இதேநேரம் இந்த தொடரிலும் அதற்கு பிறகும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக டோனி தொடர்ந்து விளையாடுவார்” என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நாளைய போட்டியில் கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது. இந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தென்னாபிரிக்காவுடனான தொடர் பங்களாதேஷ் வரலாற்று வெற்றி!

செஞ்சூரியன், மார்ச் 25

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர் ஜேன்மன் மலன் மட்டும் அதிகபட்சமாக 39 ஓட்டங்கள் சேர்த்தார். மற்ற வீரர்கள் சோபிக்கத் தவறியதால், அந்த அணி 37 ஓவர்களில் 154 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷின் டஸ்கின் அகமது 5 விக்கெட்களை வீழ்த்தினார். 155 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷுக்கு தலைவர் தமீம் இக்பால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்தினார். லிட்டன் தாஸ் ஒத்துழைப்பு அளித்து 48 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அரைச்சதம் கடந்த இக்பால் இறுதிவரை ஆட்டமிழக்காமல் பங்களாதேஷ் அணியின் வெற்றியை உறுதி செய்தார். 26.3 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்கள் எடுத்த பங்களாதேஷ் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தமீம் இக்பால் 82 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பங்களாதேஷ் அணி 1-0 என்ற கணக்கில் வென்றது. தென்னாபிரிக்க மண்ணில் பங்களாதேஷ் வெல்லும் முதல் ஒருநாள் தொடர் இது.

# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை மீண்டும் ஜடேஜா முதலிடம்!

ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசையில் சகலதுறை வீரர்களின் தரவரிசையில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா (385 புள்ளிகள்) மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இலங்கை டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவர் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் ஜசன் ஹோல்டர் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சுமாரான ஆட்டத்தையே வெளிப்படுத்தி வருகிறார்.

இதனால், 357 புள்ளிகளுடன் அவர் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்



டத்தை வெளிப்படுத்திய மார்னஸ் லபுஷேன் துடுப்பாட்ட தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். 196 ஓட்டங்கள் விளாசி இரண்டாவது டெஸ்டை சமன் செய்ய உதவிய பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

# மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம் அரையிறுதியில் தென்னாபிரிக்கா!

வெலிங்டன், மார்ச் 26

நியூசிலாந்தில் நடைபெற்று வரும் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்கா - மேற் கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான போட்டி மழையால் இரத்தானது. இதையடுத்து தென்னாபிரிக்க அணி அரை யிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

வெலிங்டனில் நடைபெற்ற போட்டியில் மழையால் இரு அணிகளுக்கும் இடையிலான முக்கியமான போட்டி 26 ஓவர்களாக குறைக்கப்பட்டது. தென்னா பிரிக்க அணி 10.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மீண்டும் மழை யால் போட்டி பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் ரத்தானதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங் கப்பட்டன.

இதையடுத்து தென்னாபிரிக்க அணி 9 புள்ளிகளு டன் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மே.இ. தீவுகள் அணி 7 போட்டிகளில் 7 புள்ளி களைக் பெற்றுள்ளது. இதர அணிகளின் வெற்றி, தோல்வியின் அடிப்படையில் அந்த அணி அரையிறு திக்குத் தகுதி பெறும். இங்கிலாந்து அணி அடுத்து விளையாடும் இரு போட்டிகளில் ஓர் ஆட்டத்தில் தோல்வியடைந்தாலோ அல்லது இந்திய அணி மீதமுள்ள ஓர் ஆட்டத்திலும் தோல்வியடைந்தாலோ மே.இ. தீவுகள் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும்.



# பெரும்பான்மை பலத்தை விரைவில் அரசு இழக்கும்

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 25

பாராளுமன்றத்தில் அரசாங்கம் வைத்துள்ள 113 ஆசனங்களின் பெரும்பான்மை விரைவில் பறிக்கப்படும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள நெருக்கடிகளை தீர்ப்பதற்கான பாதையில் நாட்டை வழிநடத்துவதற்கு பதிலாக அரசாங்கத்தின் 11 அங்கத்துவக் கட்சிகள் புதிய தேசிய வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

புதிய தேசிய வேலைத்திட்டத்தை அரசாங்கத்திடம் முன்வைத்த இரண்டு பாராளுமன்ற



உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# வாகனங்கள் இறக்குமதிக்கு இன்னும் அனுமதி இல்லை

கொழும்பு, மார்ச் 25

வாகன இறக்குமதி தொடர்பில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அத்தியாவசியப் பொருட்களை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இது வரை அனுமதி வழங்கவில்லை என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு, வாகனங்களை டொலரில் திருப்பி அனுப்புவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் தாம் முன்வைத்த முன்மொழிவை பரிசீலிக்க முடியுமா என



தொலவத்த கேள்வி எழுப்பினார்.

இது அதிகரித்து வரும் வாகனங்களின் விலையைக் குறைக்கவும், டொலரில் வரி செலுத்துவதால் அரசுக்கு டொலரை வழங்கவும் உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், டொலர் நெருக்கடி தீர்ந்த பின்னரே வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் - என்றார். (அ)

# சம்பளம் வழங்குவதற்கு டொலர் இல்லை வெளிநாடுகளில் மூடப்படும் தூதரகங்கள்

## லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தகவல்

கொழும்பு, மார்ச் 25

வெளிநாடுகளில் இருக்கும் பல இலங்கைத் தூதரங்களை மூட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், டொலர் நெருக்கடி காரணமாக அரசாங்கம் இதனை செய்து வருவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கேள் வியை ஒன்றை முன் வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தூதரகங்களில் பணி புரிவோருக்கு சம்பளம் வழங்க டொலர் இல்லாத காரணத்தினாலேயே வெளிநாடுகளில் உள்ள தூதரங்களை அரசாங்கம் மூடி வருகிறது.

ஈராக், நோர்வே நாடுகளில் இலங்கைத் தூதரங்கள் மூடப்பட்டுள்ளன. இலங்கையைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நாடுகளில் இருக்கின்றனர் - என்றார்.

இதற்கு பதிலளித்துள்ள பிராந்திய ஒத்துழைப்புகள் தொடர்பான ராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய,



வெளிநாடுகளில் உள்ள 65 இலங்கைத் தூதரகங்கள் ஊடாக நாட்டு பிரயோசனம் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து வருகின்றோம். இதனடிப்படையில், சில தூதரகங்களை மூடிவிட்டு, அவற்றின் பணிகளை வேறு நாடுகளில் உள்ள தூதரகங்கள் ஊடாக மேற்கொண்டு பணத்தை மீதப்படுத்தி வருகின்றோம்.

கடந்த காலத்தில் ஆபிரிக்க நாடுகளில் தூதரகங்களை ஏற் படுத்தும்போது ஏன் அந்த நாடுகளில் தூதரகங்களை ஏற் படுத்துகிறீர்கள் என எதிர்க் கட்சியினர் கேள்வி எழுப்பினர். தற்போது தூதரகங்களை மூடும்போது ஏன் மூடுகிறீர்கள் என கேட்கின்றனர்-என்றார். (அ)

# அமெரிக்க டொலரின் பெறுமதி 400 ரூபாய் வரை அதிகரிக்கும்!

## ஆளும்கட்சி எம்.பி. தகவல்



கொழும்பு, மார்ச் 25

அந்நிய செலாவணி வீதங்கள் கட்டுப்பாடு இன்றி நீடித்தால், மே, ஜூன் மாதளவில் அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 400 ரூபாயை தாண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் குணபால ரத்னசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொலர் கட்டுப்பாட்டை கைவிட்டதன் பின்னர் அதன் பெறுமதி 300 ரூபாய் என்ற மட்டத்துக்கு வந்துள்ளது. இந்த நிலைமை காரணமாக எதிர் வரும் காலங்களில் மக்களால் தாங்க முடியாத அளவுக்கு வழ்க்கைச் செலவு கட்டாயம் அதிகரிக்கும்.

மே, ஜூன் மாதங்களில் டொலரின் பெறுமதியானது 400 ரூபாய் என்ற மட்டத்துக்கு வந்து விடும் என்பது எனது மதிப்பீடு - என்றார். (அ)

# வரிசை யுகத்துக்கு மிகவிரைவில் முடிவு!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தகவல்

கொழும்பு, மார்ச் 25

“இந்த அரசு பாஸா, பெயிலா என்பது தேர்தல் வரும்போது தெரியவரும். நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் விரைவில் தீரும். அவை தற்காலிகமானவை. முடிந்தால் எரிபொருள் இறக்குமதி செய்து காட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன்.”

-இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

ஐக்கிய மக்கள் சக்திக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்குவதற்கு மூன்று நாடுகள் தயார் நிலையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். அவர் கூறுவது உண்மையெனில், அந்நாடுகளுடன் பேச்சு நடத்தி முதலில் எரிபொருளை கொண்டுவரட்டும். அப்போது மக்கள் மத்தியில் அவருக்கான செல்வாக்கு அதிகரிக்கும். இதோ, கோத்தா



வால் முடியாததை சஜித் செய்துவிட்டார் என மக்கள் பாராட்டுவார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் அவர் இதனை செய்ய வேண்டும். ஏனெனில் அவர் தலைமையிலான ஆட்சி எப்போது வரும் என தெரியாது. அதுமட்டுமல்ல இப்பிரச்னைகளுக்கு இன்னும் ஓரிரு வாரங்களில் தீர்வை கண்டுவிடுவோம். வரிசை யுகத்துக்கு முடிவு கட்டப்படும். எனவே, முடிந்தால் எரி பொருளை வரவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன்.

நாம் ஒளியவில்லை. மக்களுடன்தான் இருக்கின்றோம். தேர்தலொன்று வரும்போது அரசின் பலம் தெரியவரும் - என்றார்.

# இறக்குமதியாகும் அத்தியாவசிய பொருள்கள் 30 வீதம் முதல் 40 வீதத்தால் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 25

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை 30 முதல் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சீனி, பருப்பு, அரிசி ஆகியன வற்றின் விலைகளே இவ்வாறு அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவிலிருந்து கடனுதவி பெறப்பட்டதன் பின்னர், தற்போதுள்ள டொலருக்கான கேள்வி குறைவடையும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அத்தியாவசிய பொருட்களுக்கு டொலர் கோரியுள்ள இந்திய விநியோகஸ்தர்கள்

கொழும்பு, மார்ச் 25

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஆயிரத்து 500 கொள்கலன் பெட்டிகளை விடுவிக்க இந்தியாவின் கடனுவியை பயன்படுத்த சில இந்திய விநியோகஸ்தர்கள் விரும்பவில்லை என தெரிய வருகிறது.

தமது பொருட்களுக்கான பணத்தை இந்திய ரூபாவில் செலுத்தாது, அமெரிக்க டொலர்களிலேயே செலுத்த வேண்டும் என இந்திய விநியோகஸ்தர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள், மருந்து ஆகியவற்றை இறக்குமதி செய்ய இலங்கை அரசாங்கம் அண்மையில் இந்தியாவிடம் கடன் வசதியை பெறும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

இதனையடுத்து இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களைத் துறைமுகத்தில் இருந்து விடுவிக்க இந்தியா வழங்கியுள்ள இந்த கடனுதவியை பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும் இந்தியாவின் இந்த கடன் வசதியை நடைமுறைப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை முழுமைப்படுத்த வேண்டியுள்ளதாக அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

சில இந்திய விநியோகஸ்தர்கள், தமக்கு செலுத்தவேண்டிய பணத்தை அமெரிக்க டொலர்களில் செலுத்துமாறு கோரியிருப்பதால் எதிர்வரும் காலத்தில் இறக்குமதி தொடர்பான சிக்கல்கள் மேலும் அதிகரிக்கும் எனவும் சங்கம் கூறியுள்ளது. (அ)

## சர்வகட்சி...

வகையிலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்நாட்டு மக்கள் சரியான நேரத்தில் உரிய முடிவை எடுப்பார்கள். நாட்டை மீட்பதற்கான ஆணையை எங்களுக்கு வழங்குவார்கள். எனவே, ஆட்சி மாற்றம் என்பது பகல் கனவு கிடையாது.

நாட்டில் இன்று உணவு பாதுகாப்பு இல்லை. வாழ்வதற்காக போராட வேண் டிய நிலைமையே உள்ளது. இரு குடும்பங்கள் நாட்டைவிட்டே வெளி யேறியுள்ளன-என்றார். (அ)

## 10 இலட்சம்...

என்றும் தெஷாரா ஜயசிங்க தெரிவித்தார்.

அடுத்த 10 நாட்களில் 10 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## தமிழுரை...

சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற் றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியா ளர்கள் முழுமையாக பொறுப்புக் கூற வேண்டும். தமிழ் மக்களை அடக்கி அதில் குளிர்காய்ந்து ஆட்சியை கொண்டு நடத்த நினைத்தவர்கள் தற்போது அதனுடைய பலாபலன்களை அனுபவித் துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஆட்சியாளர்களின் கொள்கை யில்தான் முதலாவது பிழை இருக் கின்றது. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் இலங்கைக் குள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாகவும் வரக்கூடிய சூழ்நிலைகள் இல்லாததன் காரணமாகவும் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப் பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடிக்கு தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணாமை மிக முக்கிய பங்காக அமைகின்றது. இன்று புலம்பெயர் நாடுகளிலுள்ள ஈழத்தமிழர்கள் அங்கு மிகவும் பலமான நிலையில் இருக்கின் றார்கள். அவர்களை இங்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் அரசு சிந்திக்க வேண்டும். ஏனெனில், தற்போதைய சூழலில் வெளிநாட்டி லிருந்து 10 இலட்சம் ரூபாய்க்கு மேற் பட்ட பணம் அனுப்பப்பட்டால் அது ஏன் அனுப்பப்படுகின்றது என வங்கிக ளினால் மேலதிக விபரங்கள் கேட்கப் படுகின்றன. இதனால் வங்கிகள் மூலம் பணம் அனுப்ப புலம்பெயர் தமிழர்கள் அச்சப்படுகின்றார்கள் இவ்வாறான விடயங்களும் டொலர் பற்றாக்குறைக்கு ஒரு காரணம்.

தமிழ் இனத்தை அழிப்பதே அரசின் தொடர்ச்சியான கொள்கை. இலங்கை யில் தமிழர்களை அடையாள ரீதியாக இல்லாமல் ஒழிப்பதே அரசின் பிரதான நோக்கமாக உள்ளது அண்மையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 13 சிங்கள வர்கள் நியமிக்கப்பட்டனர். கிளிநொச் சியில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் இல்லை. 3 தமிழ் பேசும் நீதிபதிகளின் தேவை இருக்கின்ற நிலையில் 13 பேரை யும் சிங்களவர்களாகவே இந்த அரசு நியமித்துள்ளது. இங்குதான் பிழை ஏற்படுகின்றது. ஒரு சமத்துவம் இல்லாத, ஓர் இனத்தை அடக்கி ஆள்கின்ற ஒவ் வொரு செயல்பாடுகளையும் செய்கின்ற போது அது இலங்கையில் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏற்கனவே, தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாகத்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வர அச்சப்பட்டார்கள். தற்போது வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களும் இங்கு முதலீடுகளை செய்யமுடியாதுள்ளது - என்றார். (ஐ)

## ரயில்...

யிலான ரயில் சேவைகளின் கட்ட ணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படக் கூடும் எனினும், கட்டணத் திருத்தம் தொடர்பில் இணக்கப்பாடு இன்னும் எட்டப்படவில்லை என அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## நிதி அமைச்சர்...

தினர்.

எனினும் நிதி அமைச்சர் பதிலளிக் காமையால் எதிர்க்கட்சியினர் ஒழுங்குப் பிரச்னைகளை தொடர்ந்தும் எழுப்பி அது தொடர்பில் கேட்டதுடன், நிதி அமைச்சர் பேசாது இருப்பதற்கு அவர் ஊமையா? என்றும் கேட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முற்பகல் 11 மணிமுதல் பெறுமதிசேர் வரித் திட் டங்கள் தொடர்பான விவாதம் நடை பெற்ற நிலையில், பிற்பகல் நிதி அமைச் சர் சபைக்கு வருகை தந்திருந்தார்.

இவ்வேளையில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உரையாற்ற ஆரம்பித்த போது, ஒழுங்குப் பிரச்னையை எழுப்பிய லக்ஷ்மன் கிரி யெல்ல, நிதி அமைச்சர் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தார்.

இதன்போது அவர், "நிதி அமைச்சர் இந்த சபையில் இருக்கின்றார். அவரிடம் இந்த நாட்டின் நிதி நிலைமை தொடர் பிலும், இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்றத்திற்கு கூறுமாறு கேட்கின்றேன்", என்றார்.

இதன்போது நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பதிலளிப் பார் என்று சபைக்கு தலைமை தாங்கி உறுப்பினர் கூறினார்.

இதன்படி இராஜாங்க அமைச்சர் பதிலளிக்க தயாரான போது, எதிர்க் கட்சியின் நிரோஷன் பெரேரா கூறு கையில், "எங்களுக்கு நிதி அமைச்சரே பதிலளிக்க வேண்டும். அவர் இந்த சபையில் இருக்கின்றார்", என்றார்.

இதனை தொடர்ந்து செஹான் சேமசிங்க மீண்டும் உரையாற்ற தயாரான போது, மீண்டும் எழுந்த நிரோஷன் பெரேரா, நாட்டில் மக்கள் நெருக்கடி யில் இருக்கின்றனர். இதனால் நிதி அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என் றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னையை முன்வைத்த லக்ஷ்மன் கிரியெல்ல, "நிதி அமைச்சர் இந்த பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர். நிதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. இவர் இறுதியாக டிசம்பர் 10 ஆம் திகதியே உரையாற்றியுள்ளார். இதனால், பொருளாதார நிலைமை தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டும். இந்தியாவுடன் என்ன உடன்படிக்கை செய்தீர்கள், திருகோணமலை துறை முகத்தை வழங்கியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது", என்றார்.

இதனை தொடர்ந்து நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறு கையில், "கிரியெல்ல நீங்கள் இந்த சபை யில் தூங்கிக்கொண்டு இருங்கள். எழுந்தால் பிரச்னையாக உள்ளது. பாராளுமன்றத்தை தவறான வகையில் திசை திருப்ப வேண்டாம்",என்றார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஒழுங்கு பிரச்னையை முன் வைத்து, இந்த பாராளுமன்றத்தில் நிதி விடயங்கள் தொடர்பில் கேள்வி யெழுப்ப அதிகாரம் உள்ளது. இதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் கையெழுத்திட்ட உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் முன்வையுங்கள் நிதி அமைச்சர் ஊமையா?", என்றார்.

எனினும், நிதி அமைச்சர் பதிலளிக்க வில்லை. நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவே தொடர்ந்தும் பதிலளித் தார். நீங்களே இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் என்றார். (ஐ)

# எரிபொருள் விலை உயர்வுக்கு மக்களிடையே எதிர்ப்பில்லை

### பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர்

கொழும்பு, மார்ச் 25

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப் பட்டபோதிலும் பொதுமக்கள் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை என இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தா பனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக் குச் சென்று அங்குள்ள பிரச்னைகள் தொடர்பில் கேட்டறிந்ததாகவும், இன்னும் இரண்டு நாட்களில் மக்களின் எரிபொருள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும், தற்போது நிலவி வரும் எரி பொருள் தட்டுப்பாடு இன்னும் இரண்டு நாட்களில் நீங்கும் என்றும், மக்கள் கான்களுக்குள் எரிபொருளை சேர்ப்பதே தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட் டுக்குக் காரணம் என்றும் அவர் தெரி வித்தார். (அ)

# இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரி ஓய்வு!

கொழும்பு, மார்ச் 25

மூன்று நாள் உத்தியோகபூர்வ பய ணமாக இலங்கை வந்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் திணைக்களத் தலைவர் சாங்யோங் ரீ திடீரென ஓய்வை அறிவித்துள்ளார். வரும் ஏப்ரல் மாதத்துடன் அவர் தனது பதவியிலி ருந்து ஓய்வு பெறுகிறார்.

அனுபவமிக்க பொருளாதார நிபுணரான இவர் தென்கொரியாவின் மத்திய வங்கி ஆளுநராகப் பெயரிடப் பட்டமையைத் தொடர்ந்தே தனது ஓய்வை அறிவித்துள்ளார். இலங்கை வந்த சாங்யோங் ரீ ஜனாதிபதி, நிதிய மைச்சர் ஆகியோரை சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பன்றிக்கு வைத்த மின்சாரம் குடும்பஸ்தர் உயிரை பறித்தது!

வாகரை, மார்ச் 25

பன்றிக்கு வைத்த சட்ட விரோத மின்வேலி யில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - வாகரை - கோமத்தலா வெளியை சேர்ந்த இரு பிள் ளைகளின் தந்தையான சந்திரசேகரன் யோகேஸ் வரன் (வயது 32) என்ப வரே இவ்வாறு உயிரி ழந்தார்.

பழப் பயிர் செய்கை யில் ஈடுபட்டு வரும் குறித்த நபர் தன்னுடைய தோட்டத்துக்கு மின்சார சபையிடம் முறையாக மின்சாரம் பெற்றிருந்தார். இந்நிலையில், தோட்டத்துக்குள் பன்றி மற்றும் காட்டு மிருகங்கள் வருவதால் அவற் றிடமிருந்து பயிர்களை பாதுகாப்பதற் காக முறையற்ற விதத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

முறையற்ற விதத்தில் மின்சார கம் பியை இணைத்ததில் மின்சாரம் தாக்கி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

சம்பவம் குறித்து வாகரை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஆட்சியை...

இதன்பின்னர் மகாநாயக்க தேரர் களை சந்தித்து, தமது வேலைத்திட் டத்தை கையளித்தனர். இதன் பின்னர் செய்தி யாளர்களுக்குக் கருத்து வெளி யிட்ட விமல் வீரவன்ஸ,

"நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத் தோம். அமைச்சரவையில் இருந்து எம்மை நீக்கினர். ஆனால், நாம் வேலைத்திட்டத்தை கைவிடமாட் டோம். அதனை தொடர்ந்து முன்னெ டுப்போம்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மிக மோசமானவர், அவருக்கு எப்படி கதைப்பதென்றுகூட தெரியாது. அது நேற்றைய சர்வகட்சி மாநாட்டில் புலனானது. எனவே, இந்த அசிங்கமான அமெரிக்கரை வைத்துக்கொண்டு பயணிக்க முடியாது. எனவே, விரைவில் அரசின் சாதாரண பெரும்பான்மை யையும் இல்லாமல் செய்வோம்." - என்றார்.

இதன்போது, பஸில் ராஜபக்ஷவின் அரசியல் வாழ்வுக்கு முடிவு கட்டிவிட்டு நாமல் ராஜபக்ஷவை பதவிக்கு கொண்டு வரும் நாடகத்தையே 11 கட்சிகளும் முன்னெடுக்கின்றன என்ற எதிர்க்கட்சிக ளின் குற்றச்சாட்டை மறுத்த அவர், "எந்த ராஜபக்ஷர்களுக்காகவும் சோரம் போகத் தயாரில்லை", என்று கூறினார். (ஐ)

## சஜித்தின்...

கனவாகும்.

சஜித் அணியில் உள்ள 10 பேர் ரணிலுடன் பேச்சு நடத்துகின்றனர். இன் னும் இரு வாரங்களில் ரணில் பக்கம் சென்றுவிடுவார்கள்." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாட்டில் பொருட்க ளின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண் டுள்ள அமைச் சர், உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை எனவும் அறிவித்தார். (அ)

## தேடப்பட்ட...

அவரின் இளைய சகோதரர் சிவலிங்கம் திலகரிஷன் படுகாயமடைந்தார்.

இத்தாவில் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்ற கபிரியேல் முத்துலிங்கம் என்பவ ரின் அறிவுறுத்தலின் பேரில், பாதிக்கப் பட்ட நபர், ரமேஷுக்கு வெடிமருந்து களை வெட்டி விற்பனை செய்துள்ளார்.

யுவராஜ் இறந்ததையடுத்து, ரமேஷ் தலைமறைவானார். இந்த நிலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பளையில் அவர் தங்கியிருந்த வீடு சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட் டார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

## தமிழ் தேசிய...

வைக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த 15ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங் கேற்று ஜனாதிபதியுடன் பேச வேண்டிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடி னர். இதன்போது, தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்பு, புதிய அரசியல் சாசனம், அரசியல் கைதிகளின் விடுதலை என தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் நாட்டில் இன்று நிலவும் பொரு ளாதார நெருக்கடிகள் தொடர்பாகவும் பேசுவது எனத் தீர்மானிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மே மாத இறுதிவரை மின் தடை தொடரும்

கொழும்பு, மார்ச் 25

தற்போதைய 5 மணி நேர மின்வெட்டு மே இறுதி வரை தொடர வாய்ப்புள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்

எவ்வாறாயினும் புத்தாண்டு தினங்களில் மின் வெட்டு ஏற்பட வாய்ப்பில்லை எனவும் அவர் கூறினார்.

அனல் மின் நிலையங்கள் முழுமையாக எரிபொருளைப் பெற்றபோதிலும், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மே மாதம் வரை குறைந்தது இரண்டு மணி நேரம் மின்சாரம் தடைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பங்கீட்டு அட்டைக்கு காஸ் சிலிண்டர்!



யாழ்ப்பாணம், மார்ச் 25

சாவகச்சேரியில் உள்ள லாஃப் காஸ் பிரதான விநியோக நிலையத்தில் பல வாரங்களின் பின்னர் குடும்ப பங்கீட்டு அட்டை மற்றும் அடையாள அட்டை பிரதிக்கு ஒரு எரிவாயு சிலிண்டர் வழங்கப்பட்டது.

இதனால் மக்கள் வெற்று எரிவாயு சிலிண்டர்களுடன் நீண்ட வரிசையில் நின்றதை அவதானிக்க முடிந்தது. (அ)

# தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவருக்கு மறியல் நீடிப்பு

ஏறாவூர், மார்ச் 25

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ்உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனை எதிர்வரும் 6ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

இணையத்தளங்களில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் படங்களை பதிவுவேற்றியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் பயங்கரவாத திருத்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# யாழ். பல்கலைக்கழகத்தில் கலாநிதி ராஜினியின் படம்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பொது அறையில் கலாநிதி ராஜினி திரணகமவின் படம் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைகழக மருத்துவபீடத்தின் உடற்கூற்றியல் பிரிவு தலைவராகவும் விரிவுரையாளராக பணியாற்றிய ராஜினி திரணகம 1989 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

"முறிந்த பனை" என்ற பெயரில் பின்னர் தமிழில் வெளியான The Broken Palmyra என்ற ஆங்கில நூலின் ஆசிரியர்கள் நால்வரில் இவரும் ஒருவர்.

இந்நிலையில், இவர் கொல்லப்பட்டு கிட்டத்தட்ட 33 வருடங்களின் பின்னர் அவரது புகைப்படம் யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

# மக்களின் அத்தனை துன்பங்களுக்கும் பஸில் ராஜபக்ஷவின் தவறே காரணம்!

## உதய கம்மன்பில பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 25

**நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குரக்கன் சால்வையை அணிந்தாலும் குரக்கனும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுவதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

**நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தவறு காரணமாகவே நாட்டு மக்கள் தற்போது துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.**

மகரகமையில் நடைபெற்ற பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ள நெருக்கடி தொடர்பாக நான் முன்கூட்டியே அறிந்திருந்தேன். 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளை நிறுத்துமாறு நான், விமல் வீரவன்ஸ மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் யோசனை முன்வைத்தோம்.

எனினும் அப்பிள் பழங்களை இறக்குமதி செய்யாது போனால், சுற்றுலாப் பயணத்துறையை நடத்த முடியாது என நிதியமைச்சர் கூறினார். இது கேலிக்குரியது.

அவுஸ்திரேலியாவில் இருக்கும் வெள்ளைக்காரர் தமது நாட்டில் உடனடியாக கிடைக்கும் அப்பிள் பழத்தை சாப்பிடாது, விமானத்தில் ஏறி 11 மணி நேரம் பயணம் செய்து, இலங்கைக்கு வந்து, ஆறு மாதங்களாக பதப்படுத் தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் அப்பிள் பழத்தை சாப்பிடுவாரா?.

இதற்கு பதிலாக இலங்கையில் கிடைக்கும் அன்னாசி மற்றும் பலாப் பழங்களை சுற்றுலாப் பயணிகளிடம் பிரபலப்படுத்தலாம் - என்றார். (அ)

# நாட்டுக்கு எதிரான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பின்பே அறிவிப்பு

## மல்வத்து மகாநாயக்கரிடம் கூறினார் விமல்

கொழும்பு, மார்ச் 25

நாட்டுக்கு எதிரான அனைத்து உடன்படிக்கைகளையும் கைச்சாத்திட்ட பின்னரே அவை பற்றி அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மக்கள் எரிவாயு வரிசைகளிலும் எரிபொருள் வரிசைகளிலும் மருந்து வரிசைகளிலும் இருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனைத்து உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன எனவும் அவர் கூறினார்.

மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரிடம் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நாட்டிற்குள் தற்போது மிகவும் பயங்கரமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை மோசமாக மாற இடமளிக்க முடியாது. முடியாத பட்சத்திலேயே நாங்கள் அதனை நாட்டுக்கு கூற ஆரம்பித்தோம். அப்படி செய்யும்போது எங்களை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றினர் - என்றார்.

அதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட மல்வத்து மாநாயக்கர், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இலங்கையின் சில பகுதிகள் மற்றும் துறைகள் உடன்படிக்கைகள் மூலம் வழங்கப்படுவது தொடர்பாக நாட்டு மக்கள் மத்தியில் வாத விவாதங்கள் உருவாகியுள்ளன.

இது சம்பந்தமான எந்த வெளிப்படைத்தன்மையும் இல்லை என மக்கள் கூறுகின்றனர். உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையில் ஏற்பட்டுள்ள நிலைமையை இலங்கையில் ஏற்படுத்த தயாராகி வருகின்றனர் - என்றார்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, டிரான் அலஸ் உள்ளிட்டோர் நேற்று மல்வத்து மாநாயக்க தேரரை சந்தித்தனர். (அ)

# இரண்டாயிரம் பில்லியன் ரூபாயாக அரசாங்க வருமானம் உயரவேண்டும்!

## பேராசிரியர் ரஞ்சித் பண்டார

கொழும்பு, மார்ச் 25

அரசின் வருடாந்த வருமானம் 1,500 பில்லியன் ரூபாயாக உள்ள நிலையில் செலவு 3,500 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகின்றது. இதனால் மாதாந்தம் 167 பில்லியன் ரூபாய் கடனாகப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகக்குறைந்தது அரசாங்கத்தின் வருமானத்தை 2000 பில்லியன் ரூபாயாக அதிகரிக்க வேண்டியுள்ளது என்று அரச தரப்பு எம்.பி.யான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

கடன் பெற்றுக் கொள்ளாமல் இருந்தால் எமது உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாமே தவிர, நாட்டின் எதிர்கால சந்ததிக்காக எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது.

நாட்டின் வருமானத்தில் 70 வீதம் நாடு பெற்றுக் கொண்டுள்ள கடனை மீளச் செலுத்துவதற்கே செலவாகிறது. மேலும் 58 வீதம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு செலவாகிறது. எமது வரவு - செலவுத் திட்டத்தில் 28வீத குறைபாடு வருடாந்தம் காணப்படுகிறது.

அந்தவகையில் கடந்த 2021ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 12.5 வீதமாக அது உள்ள நிலையில் இந்த வருடத்தில் அதனை 8.8 வீதமாக குறைத்துக் கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதற்கிணங்க நாட்டின் தேசிய வருமானத்தை நூற்றுக்கு 12.5 வீதமாக அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கு இதுபோன்ற திருத்தங்களை கொண்டு வர நேர்ந்துள்ளது - என்றார். (அ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கோவா,காஞ்சனா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : ஞாழசவ குடைஅ
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-மீனவர் பிரச்சினை-பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்